JULY '50

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

கண்ணன்

தபால் பெட்டி : 604,
மயிலைப்பூர்,
சென்னை, 4.

வருஷ சந்தா
ரூ. 3/-

கலைமகள்
மஞ்சரி
கண்ணன்
குடும்பச் சந்தா
ரூ. 12/-

பொருளடக்கம்

மலர்: 1 இதழ்: 8

குழந்தைகளே! .. .. .. பக்கம்

தீராத விளையாட்டுப் பிள்ளை .. ..

நீலப் பாவாடை – ஜி. எஸ். விசாலம் .. 4

ஆள் மாருட்டம் - 'ஸேனு' 9

கோட்டையைப் பிடி - 'சுண்டு' 13

எழுத்திலே படங்கள் - 'மூட்டை' 14

பவழவல்லி - கி. ரா. 15

ஜக்கு - வரவேற்பு - 'ஆர்வி' 20

மறைந்த மோதிரம் - காக. சுப்பையா .. 25

நாலு பிள்ளைகள் – 'வாசகன்' 34

உதவாத நண்பர்கள் - 'சோமசன்மா' .. 35

சௌபாக்கிய சுந்தரி - 'அலகா' 41

ஒட்டைச்சிவிங்கி - (நீங்களே செய்யலாம்) 48

ஸர் சி. பி. - கே. எஸ். ஆர். சாஸ்திரிகள் .. 49

கண்ணன் கழக அங்கத்தினர்கள் 53

குயில் - தி. ஜ. ர. 56

கண்ணன் தபால் 61

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

உங்களுக்கு ஒரு சந்தோஷச் செய்தி! கண்ணன் கழகப் பதக்கங்கள் தயாராகி வந்துவிட்டன. மூன்று கூப்பன்கள் அனுப்பி நிரந்தர அங்கத்தினரானவர்களுக்கு அவைகளை அனுப்பிக்கொண்டிருக்கிறோம்.

கண்ணன் கழகப் பதக்கத்தைப் பற்றிச் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். பதக்கம் ஓர் ஆபரணமல்ல, அதைப் போட்டுக்கொண்டு அழகு செய்துகொள்ள. நாளுக்கு நாள் பெரிதாக வளர்ந்துவரும் கண்ணன் கழகத்தில் நீ ஓர் அங்கத்தினன். அதற்கு அது ஓர் அடையாளம்; அவ்வளவுதான். எல்லா அங்கத்தினர்களையும் ஒன்று சேர்க்கவும் நட்புக்கொள்ளவும் நம் கழகம் உதவியாக இருக்கும். ஒருவருக்கு ஒருவர் சமயத்தில் உதவி செய்ய நம் அங்கத்தினர்கள் பயில வேண்டும்.

இந்த மாதம் சென்னை நகரிலுள்ள கழக நண்பர்களை 12-8-50 அன்று ஒரு கூட்டத்துக்கு அழைத்திருக்கிறேன். அழைப்பிதழ் தனித்தனியே அனுப்பப்பட்டுள்ளது. எல்லாரும் வந்து கலந்துகொள்ள வேண்டும். வெளியூரிலுள்ள கழக அங்கத்தினர்களையும் சந்திக்க எண்ணிக்கொண்டிருக்கிறோம். விரைவில் அது சாத்தியமாகும் என்று நம்புகிறேன்.

காமிராப் பரிசுப் போட்டிக்கு நான் சொல்லியிருந்தபடி 1000 கதைகள் வந்துவிடும் என்று எண்ணினேன். ஆனால் கிட்டத்தட்ட 650 கதைகள் வந்தன. எல்லாருடைய உற்சாகத்தைக் கண்டதும் எனக்கும் உற்சாகமாகத்தான் இருந்தது. இந்தப் பரிசை இந்தத் தடவை ஒரு பெண் குழந்தை தட்டிக்கொண்டு போகிறாள். சென்ற இரண்டு பரிசுகளையும் ஆண் பிள்ளைகளே தட்டிக்கொண்டு போவதாவது என்றுதானோ என்னவோ, சௌ. ஜி. எஸ். விசாலம் (V. 46) இதில் வெற்றி பெற்றிருக்கிறாள். அந்தக் குழந்தை[illegible] என் மனப்பூர்வமான ஆசி[illegible]யும் பாராட்டுக்களையும் [illegible]வித்துக்கொள்கிறேன்.

பிரௌனி காமிரா அ[illegible] குழந்தையிடம் போய்க்கொ[illegible]டிருக்கிறது. தன் கையாலே[illegible] தன்னை எடுத்துக்கொண்ட ஒரு போட்டோவை அனுப்பும்படி அவளைக் கேட்டிருக்கிறேன். அடுத்த இதழில் நீங்கள் அதை எதிர்பார்க்கலாம்.

சென்ற இதழில் அடுத்த பரிசைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். 'வியூ மாஸ்டர்' பரிசு! அதன் விவரங்களைக் கடைசி அட்டையில் பார்த்துக் கொள்ளுங்கள்.

—ஆசிரியர்.

தீராத விளையாட்டுப் பிள்ளை



விளையாட வாவென் றழைப்பான்; - வீட்டில்
வேலையென் றலதைக் கேளா திழுப்பான்;
இளையாரோ டாடிக் குதிப்பான்; - எம்மை
இடையிற் பிரிந்துபோய் வீட்டிலே சொல்வான்.

—பாரதியார்.

பரிசு பெற்ற கதை:

நீலப் பாவாடை

ஜி. எஸ். விசாலம்
(V. 46. கண்ணன் கழகம்)

முனிசாமி ஒரு தபால்காரன். அவன் குழந்தை செல்விதான் அவனுடைய வாழ்க்கையில் சந்தோஷத்துக்கு ஒரே ஆதாரம். தீபாவளிக்கு முதல் நாள் முனிசாமி கையில் ஒரு பைசா கூட இல்லாதவனாய் மன டைந்து, அந்த அந்த வீட் த் தபால்களைக் கொடுத்து ட்டு, தன் வீட்டுக்குள் நுழைந்தான்.

"அப்பா, பாவாடை வாங் த் தா!" என்று அவனுடைய ந்து வயதுப் பெண் செல்வி ஓடி வந்து, அவன் கால்களைக் கட்டிக்கொண்டாள். முனிசாமிக்குத் தன் பெண்மேல் அன்பில்லாமல் இல்லை. உண்மையில் அவள்மேல் தன் உயிரையே வைத்திருந்தான். ன்னவோ இல்லாக்கொடுமையினால், ஆத்திரப்பட்டுத் தன் லைக் கட்டிக்கொண்ட குழந் யைப் பிடித்துத் தள்ளி ட்டான். அவ்வளவுதான்! ன்றிரவு படுக்கையில் படுத்த செல்வி பிறகு எழுந்திருக்கவே இல்லை. தாய் போன இடத்துக்கே அவளும் போய் விட்டாள்.

இந்தச் சம்பவத்துக்குப்பின் முனிசாமி பைத்தியக்காரன் போல் ஆனான்.

வருஷங்கள் இரண்டு ஓடின.

முனிசாமிக்கு உலகத்தின் மீது பற்றுதல் இல்லாமல் போயிற்று. தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருந்தான்.

தினந்தோறும் அவன் காலையில் எழுந்திருப்பான். தபாலாபீஸுக்குப் போவான். கட்டுப் பிரித்ததும் தபால்களை எடுத்துக்கொண்டு, தெருத் தெருவாகச் சென்று கடிதங்களைக் கொடுத்துவிட்டு வருவான். இப்படியே அந்த இரண்டு வருஷமும் வேலை செய்தான்.

தீபாவளிக்குச் சில நாட்கள் இருந்தன. அது வருவதற்கு அறிகுறியாக பட், டப் என் பட்டாசு சத்தம் எங்கும் முழ

கியது. அந்தச் சத்தம் சிறுவர்
களுக்கு வரப்போகும் பண்டி
கையைப் பற்றிய இன்ப

நினைவையும், பெரியவர்களுக்
குச் செலவைப்பற்றிய கவலை
யையும் கொடுத்தது.

மத்தியான்னம் மணி பன்னி ரண்டு இருக்கும். முனிசாமி, வக்கீல் சங்கரஐயர் வீட்டுக்குச் சென்ருன். வக்கீலின் பேருக்கு ஒரு மணியார்டர் வந்திருந்தது. வக்கீல் நாற்காலியில் உட்கார்ந்து மேஜை மேல் குவிந்திருந்த கேஸ் கட்டுக்களை ஆராய்ந்துகொண் டிருந்தார்.

முனிசாமி, "சாமி" என்று கூப்பிட்டுக்கொண்டே சென்ருன்.

அந்தச் சமயத்தில் உள்ளே ஐந்து வயதுப் பெண் குழந்தை ஒருத்தி காலில் போட்டிருந்த தண்டை ஒலிக்க ஓடிவந்தாள்.

"அப்பா! அடுத்த வீட்டு பேபிக்கு அவ அப்பா நீலப் பாவாடை வாங்கிக் கொடுத்திருக்கா. எனக்கும் வாங்கித் தா அப்பா" என்று மழலை பொங்கக் கொஞ்சிக் கொண்டே தன் தந்தையின் மடிமேல் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

"போ, தொந்தரவு செய்யாதே" என்று சங்கர ஐயர் சீறி விழுந்தவண்ணம் குழந்தையை மடியிலிருந்து தள்ளிவிட்டார். முனிசாமிக்குப் பழைய நினைவை ஊட்டியது அந்தக் காட்சி.

"நீலப் பாவாடை வேணும்" என்று ஓலமிட்டது குழந்தை.

"இங்கே வந்து தொந்தரவு பண்ணுதே என்ருல் கேட்காமல் அவ்வளவு பிடிவாதமா என்ன? துரதிருஷ்டம் பிடித்த பெண்ணே" என்று பல்லைக் கடித்து, நாற்காலியை விட்டு எழுந்து சென்று, பட் பட் என்று குழந்தையின் முதுகில் அறைந்தார்.

"ஏண்டா, குழந்தைக்கு என்ன தெரியும்? இப்படிப் பிசாசு போல் அடிக்கிருயே" என்று கூறியவண்ணம் அவர் தாயார் குழந்தையை அன்போடு அணைத்து எடுத்துச் சென்ருள்.

"பாட்டி, அப்பா அடிச்சா" என்று குழந்தை விக்கிற்று.

"பாட்டி, எனக்குப் பட்டுப் பாவாடை வேணும். அடுத்த வீட்டு பேபிக்கு அவ அப்பா வாங்கித் தந்திருக்கா. நம்ப அப்பா மட்டும் ஏன் வாங்கித் தரமாட்டேங்கரு?"

"உன் அம்மாதான் செத்துப் போயிட்டாளே. அதனுல் இந்த வருஷம் தீபாவளி நமக்குக் கிடையாது" என்ருள் பாட்டி.

"அம்மா செத்துப் போகலே, ஊருக்குப் போயிருக்கான்னு நீதானே சொன்னே? எனக்குப் பாவாடை வேணும்" என்று அழுதது அந்தக் குழந்தை.

"அழாதே கண்ணு. உன் அத்தை ஜானகி இருக்காளே, அவள் உனக்குப் பாவாடை வாங்கி அனுப்பறேன்னு கடுதாசி போட்டிருக்கா. தீபாவளி அன்னிக்குப் பார்சல் வரும்" என்று சொல்லிக் குழந்தையைச் சமாதானப் படுத்தினுள்.

"நிசம்மாவா, பாட்டி!"

என்று அந்தக் குழந்தை ஆச்சரியம் தொனிக்கும் குரலில் கேட்டது.

இந்தச் சம்பவம் முழுவதையும் முனிசாமி கேட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய குழந்தை செல்விக்குத் தாயும் இல்லை; பாட்டியும் இல்லை. அதனால் அவன் தள்ளி விட்டபோது அந்தக் குழந்தைக்கு ஆறுதல் சொல்ல யாருமே இல்லை. இப்போது அவளும் இல்லை. அவனை அறியாமல் அவன் கண்களில் நீர் வழிந்தது. அன்று முழுவ தும் அவனுக்குத் தூக்கம் வர வில்லை. தன் குழந்தை செல் யைப் பற்றியே எண்ண கொண்டிருந்தான்.

மறுநாள் பொழுது விடி தால் தீபாவளி. அதுவரையி வக்கீல் சங்கர ஐயர் வீட்டு

குப் பார்சல் வரவில்லை. வராது என்பதும் அவனுக்குத் தெரியும். கடுதாசி போட்டிருந்தால் அதை அவன் கொண்டு போய்க் கொடுத்திருக்க மாட்டாஞ? கடுதாசிதான் வரவேயில்லையே.

அன்று முனிசாமி தான் இவ்வளவு நாளாகச் சேர்த்து வைத்த பணத்தை எடுத்துக் கொண்டு கடைக்குப் போய் நீல நிறத்தில் ஒரு பட்டுப் பாவாடையும், பச்சை நிறத்தில் ஒரு சட்டையும், நிறைய ஜரிகை போட்டதாகப் பார்த்து வாங்கினன். பார்சலாக அதைக் கட்டினன். ஆபீஸுக்கு அதைக் கொண்டு போய் அதில் ஒரு முத்திரையை வைத்து எல்லாத் தபால்களுடன் அதையும் எடுத்துக் கொண்டு வெளிக் கிளம்பினன். எல்லா வீட்டுக்கும் கொடுத்த பிறகு வக்கில் சங்கர ஐயர் வீட்டுக்குப் போனன். அன்று வக்கீல் ஊரில் இல்லை.

“அம்மா, பார்சல் வந்திருக்கிறது” என்று கத்தினன் முனிசாமி.

“அவன் வீட்டில் இல்லையே” என்ருள் சங்கர ஐயரின் தாயார்.

“உங்க பேருக்குத்தான் வந்திருக்கிறது. யாரோ ஜானகி அம்மாள், அவுங்க அனுப்பிச்சு இருக்காங்க” என்ருன் முனிசாமி.

“பாட்டீ, அத்தை பார்சல் அனுப்பிச்சு இருக்கா!” என்று குதித்தது குழந்தை.

‘என்ன ஆச்சரியம்! ஜானகிக்குக்கூட இவ்வளவு தெரிந்திருக்கிறதே. பாவம்! குழந்தையைப் பொய் சொல்லி ஏமாற்றி விட்டோமே; என்ன செய்கிறது என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்’ என்று முணுமுணுத்துக்கொண்டே பார்சலை அவிழ்த்தாள் சங்கர ஐயரின் தாயார்.

அதில் நீலப் பாவாடையும், பச்சைச் சட்டையும் இருந்தன. “ஹையா! நீலப் பாவாடை, பாட்டீ” என்று குதித்தது குழந்தை. “எனக்கு எங்க அத்தை பாவாடை தைச்சு அனுப்பி இருக்கா; பாத்தியா? நீலப் பாவாடை! எவ்வளவு ஜரிகை பாரேன்!” என்று வீடுவீடாகப் போய் எல்லாப் பெண்களிடமும் பெருமை அடித்துக்கொண்டாள்.

மறுநாள் தீபாவளி. கிழக்கு வெளுக்கும் நேரம்.

நீலப் பாவாடையும், பச்சைச் சட்டையுமாகச் சங்கர ஐயரின் பெண் தெருத்திண்ணையில் காட்சி அளித்தாள். கையில் மத்தாப்பு. முனிசாமி அந்தக் குழந்தையைப் பார்த்துச் சந்தோஷப்பட்டான். அவன் தனக்குள்ளாக, “என் வாழ்விலேயே என் மனம் சந்தோஷத்தால் நிறைந்திருப்பது இன்றுதான்” என்று முணுமுணுத்துக்கொண்டான்.

ஆள் மாருட்டம்

'ஸேஞ'

[காலே நேரம். பழுவேற் காட்டுக் கடற்கரையில் ஒரு சவுக்கந்தோப்பு. தூரத்தில் செம்படவர் குடிசைகள் நாலைந்து தெரிகின்றன. ஸ்கவுட் வாத்தியார் ராமசாமியும் சோமு, ராஜு, நடேசன் முதலிய மாணவர்களும் கூடாரம் அடிப்பதற்கு வேண்டிய சாமான்களோடு வருகிருர்கள்.]

ராமசாமி: (தோப்பு நடுவில் திறந்த வெளி ஒன்று இருப்பதைக் கவனித்து) சோமு, ராஜு! மற்றவங்களெல்லாம் ஊர் சுற்றிவிட்டு வர நேரமாகும். அதற்குள்ளே நீங்கள் இரண்டுபேரும் காரியத்தை முடித்துவிடணும். அந்த இடத்தில் ஆணி அடித்துக் கூடாரம் போடுங்கோ- அடே நடேசா, நீ போய் அக்கம் பக்கத்திலே ஏதாவது கிணறு இருக்கிறதா, பார்த்து வா. (நடேசன் ஓடிப் போகிருன்.)

சோமு : சரி; நாம் ஆரம்பிக்கலாம்.

ராஜு: (கூடாரத்துக்கு வேண்டிய ஆணிகளைப் பையிலிருந்து எடுத்துக்கொண்டே) இந்தத் தடவைதான் உங்களோடெல்லாம் வர முடிந்ததடா! அப்பாவும் அம்மாவும் என்னைப் போகவிட்டால் தானே? அப்புறம் எப்படியோ ஒப்புக்கொண்டா. வாத்தியார் கிட்டக்கூட 'எங்கேயாவது தனியாகப் பீச்சிலே குளிக்கப் போகிருன், ஜாக்கிரதை' என்று சொல்லித்தான் அனுப்பினு.

சோமு: (ஆணி அடித்துக் கயிறு கட்டிக் கூடாரத்தை நிறுத்திக்கொண்டே) பெரிய வக்கீல் வீட்டுப் பிள்ளையப்பா நீ! - அதோடு ஒரே செல்லப்



பிள்ளை! நாங்கஎல்லாம் அப்படியா? எங்க அப்பா குசேலர் மாதிரி யாரைன்னு கவனிப்பார்! தண்ணீர் தெளித்துவிட வேண்டியதுதானே? (இருவரும் சிரிக்கிறார்கள்.)

[சற்றுத் தூரத்தில் இரண்டு செம்படவச் சிறுவர்கள் ஏதோ கத்திக் கொண்டே ஓடுவது தெரிகிறது. ஒரு நிமிஷத்துக்கெல்லாம் நடேசன் மேல் மூச்சு வாங்க அங்கே வருகிறான்.]

நடேசன்: (திகைப்போடு) என்னடா ராஜு, நான் கூப்பிடறேன், கூப்பிடறேன்; நீ பாட்டுக்குச் சட்டை பண்ணாமல் அங்கே நாலைந்து செம்படவப் பசங்களோடே நீச்சலடிச்சுண்டு இருந்தயே? அதற்குள்ளே இங்கே எப்படி வந்தே?

சோமுவும் சாமியும்: என்னடா உளர்றே? பைத்தியம் கியித்தியம் பிடிச்சூட்டுதா உனக்கு?

ராம: (சற்றுத் தூரத்தில் இருந்தபடியே) என்னடா, கிணறு இருக்கிறதா, பார்த்தியா?

சோமுவும் சாமியும்: ஸார், ஸார், அவனுக்கு மூளை கலங்கிப் பூட்டுது ஸார். 'இதுதானா பூலோகம்? நீங்கள் தானா மானிடர்கள்?' என்கிறான், ஸார்! (விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள்.)

ராம: (நெருங்கி வந்து) என்னடா சங்கதி?

நடே: கொஞ்சம் முன்னே ராஜுவை அந்தச் செம்படவர் குடிசை கிட்ட நீஞ்சிண்டு இருந்ததை என் கண்ணாலே பார்த்தேன், ஸார்.

ராம: (ஏளனமாகச் சிரித்து) மகா புத்திசாலிதான்! அப்போதிருந்து இங்கேதானடா நாங்கள் மூன்று பேரும் இருக்கோம்? யாரைப் பார்த்தயோ? - அப்புறம் கிணற்றைப் பார்த்தாயா?

நடே: அதோ காளி கோவில் கிணற்றிலேதான் எல்லாரும் ஜலம் தூக்கறா. (யோசித்துக் கொண்டே) இதென்னடா அதிசயமா யிருக்குதே! நம் கண்ணையே நம்ப முடியவில்லையே!

[ஒரு செம்படவச் சிறுவன் அந்தப் பக்கமாக வருகிறான். ராஜுவைப் பார்த்ததும் அவன் அப்படியே நின்று விடுகிறான்.]

செம்படவச் சிறுவன்: ஏண்டா பச்சை, இங்கேயா வந்து ஒளிஞ்சுக்கிட்டிருக்கே! உன் மூஞ்சிக்கு இந்த உடுப்புக்கூட வேறேயா? - என் கோலியைக்கொடுக்கிறயா, இல்லையா? (ராஜுவை அடிக்கக் கையை ஓங்குகிறான்.)

ராம: (தடுத்து அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு) யாரடா நீ?

செம். சிறு: (முறைத்துப் பார்த்துக் கையைத் திமிறிக் கொண்டு) பச்சையை நான் கேட்டுக்கறேன்; உனக்கென்ன, ஐயா?

ராஜுவும் சோமுவும்: (திகைத்து) இதென்னடா நமக்குக்கூட நடேசனுட்டம் பைத்

தியம் பிடிச்சுடும்போல் இருக்குதே!

[அதே சமயம் திடீரென்று அருகில் இருக்கும் ஒரு பள்ளத்திலிருந்து மற்ருெரு செம்படவச் சிறுவன் ஓடிவந்து முதல் செம்படவச் சிறுவனின் காலைத் தட்டி விடுகிருன். பொதீல் என்று முதல் சிறுவன் விழுகிருன்; எல்லாரும் சிரித்துக் கொண்டே இரண்டாம் சிறுவனை உற்றுக் கவனிக்கிருர்கள்.]

நடேசன்: (ஆச்சரியத்தோடு) ஸார், நான் சொன்ன பையன் இவன்தான்!

முதல் செம். சிறு: (கோபத்தோடு எழுந்தவன் ராஜுவையும் தன் அருகில் இருக்கும் செம்படவச் சிறுவனையும் மாறி மாறிப் பார்த்துத் திகைப்போடு) இதென்னடா அதிசயமாயிருக்குதே!

ராஜு: (தன்னையே நம்ப முடியாமல்) என்னன்ன!

முதல் செம். சிறு: (சற்று யோசித்து) ஐயா, இவன் தானுங்க பச்சை. இவங்க இரண்டு பேரும் ஒரேமாதிரி இருக்கவே ஆள் மாருட்டம் ஆயிட்டுதுங்க. (பச்சையும் ராஜுவைப் பார்த்துத் திகைத்து நிற்கிருன்.)

ராஜு: (மயக்கம் தெளிந்து எழுந்தவன் போல) ஸார், எங்க அப்பா அடிக்கடி சொல்வார்: என்னேடு இரட்டையாகப் பிறந்த இன்னெரு பையன் இருந்தானும். அவன் பெயர் கிட்டு. பன்னிரண்டு வருஷத்துக்கு முன்னே நாங்கள் அவரோடு அடையாறு



பீச்சுக்குப் போயிருந்தபோது இருட்டி விட்டதாம்; அப்போது திடீர்னு கிட்டுவைக் காணல்லையாம். எங்கே தேடியும் அவன் அகப்படவேயில்லையாம். சமுத்திரத்தில் மூழ்கி விட்டான்னு சொல்ரு.

ராம: (ஆச்சரியத்தோடு) நிஜமாகவா? (பச்சையைப் பார்த்து) நீ யார், தம்பி? உங்க அப்பா பேர் என்ன?

மூதல் செம். சிறு: அவனுக்குத் தாய் தகப்பன் இல்லிங்க. இப்போ எங்க வீட்டிலேதான் இருக்கான்.

[அதே சமயம் மோட்டார் ஒன்று அருகிலுள்ள சாலையில் வந்து நிற்கிறது. அதிலிருந்து நடு வயதுள்ள ஒரு கனவானும் அவர் மனைவியும் இறங்குகிருர்கள்.]

ராஜு: ஸார், ஸார், அதோ அப்பாவும் அம்மாவும் என்னைத் தேடிக்கொண்டு வந்துவிட்டார்!

[ஸ்கவுட் வாத்தியார் முன்னுல் போய் அவர்களிடம் விஷயத்தைத் தெரிவிக்கிருர்.]

ராஜுவின் தாய்: (ஆவலோடு) என்ன, என்ன? நம்ம கிட்டு அகப்பட்டுவிட்டானு?

ராஜுவின் தந்தை: (கால்கள் தள்ளாட) இரு இரு. அவசரப் படாதே!

[இருவரும் நெருங்கி வந்து பச்சையையும் ராஜுவையும் மாறி மாறிக் கவனிக்கிருர்கள்.]

ராஜுவின் தாய்: (பச்சையின் கழுத்திலுள்ள ஒரு வடுவைக் கவனித்துக் கண்ணில் நீர் ததும்ப) ஐயோ! அதோ கழுத்திலே கண்ணாடி அறுத்த வடு!

ரா. தந்: இரு; விசாரிப்போம். (முதல் செம்படவச் சிறுவனைப் பார்த்து) நீ போய் உன் தகப்பனை இட்டு வா.

[அவன் ஒரு செம்படவனை அழைத்து வருகிருன்.]

செம்: நிசந்தானுங்க; திருவாமூர்க் கிழவன்னு ஒருத்தன் அவனை வளர்த்தான். சமுத்திரக் கரையிலே மூர்ச்சையாகக் கிடந்த குழந்தையாம் இவன்.

ரா. தந்தை: (கண்ணீரை அடக்கிக்கொண்டு பச்சையிடம்) எங்க பிள்ளைதாண்டா நீ! - எங்களோடு வறயா?

பச்சை: (ஏதோ கனவிலிருந்து விழித்தவன்போல) எனக்குக் கூட உங்களை எப்பவோ பார்த்த மாதிரிதான் இருக்குது - ஆனால் இவங்களை விட்டு எப்படி வருவேன்?

ரா. தந்தை: (பரிதாபமாக) இது என்ன சங்கடம்! (யோசித்து, பெரிய செம்படவனிடம்) நான் உனக்கும் வேண்டியதைச் செய்கிறேன். என்னேடு நீயும் வந்துவிடேன்.

பெ. செம்: (எதிர்பாராத இந்த அதிருஷ்டத்தினுல் நன்றி தோன்ற) இங்கே கஷ்டப் பட்டுக்கொண்டுதான் இருக்கோம், சாமி. எல்லாம் உங்க இஷ்டம்.

பச்சை: (உற்சாகத்தோடு) சரி; நானும் வருகிறேன்.

[தாய் அவனை நெருங்கி அணைத்துக்கொள்கிருள்.]

(திரை)



கோட்டையைப் பிடி

'சுண்டு'

இதோ ஒரு புது விளையாட்டு. இந்த விளையாட்டுக்கு 12 பேராவது இருந்தால்தான் ஆட்டம் குஷியாக இருக்கும். படத்தில் காட்டியிருப்பது 15 பேர் ஆட்டம்.

முதலில் பூவா, தலையா போட்டு, 5 பேரைப் பொறுக்க வேண்டும். உள்ளே இருக்கும் வட்டத்தின் நடுவில் ஐந்து டென்னிஸ் பந்துகளை வைத்து, அவர்கள் கோட்டில் நின்று காவல் புரியவேண்டும். வெளி வட்டத்தில் தலைக்கு ஒரு பந்தை வைத்துக்கொண்டு பாக்கிப் பத்துப்பேரும் நிற்பார்கள். இந்த 10 பேரும் உள்ளே இருக்கும் பந்துகளைக் குறிபார்த்துப் பந்தால் அடிப்பார்கள். கோட்டையில் நிற்கும் ஐந்து பேர் அந்த ஐந்து பந்துகளையும் வெளியில் விடாமல் பாதுகாக்க வேண்டும். அவர்கள் கோட்டை விட்டு வெளியில் வரக்கூடாது. இடைவிடாத தாக்குதலால் பந்துகள் வெளியில் ஓடிவந்துவிடும். அப்படி வந்தால் அவைகளை அந்தப் பத்துப்பேர்களில் யாராவது சிலர் எடுத்துக்கொண்டு விட வேண்டும். எல்லாப் பந்துகளும் வந்துவிட்டால் கோட்டையைப் பிடித்தாகிவிட்டது என்று அர்த்தம். அப்புறம் புது ஆட்டந்தான் ஆடவேண்டும்.

யாருக்காவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள்; சொல்லுகிறேன்.

எழுத்திலே படங்கள்



1. அணில். 2. பன்றி. 3. ஒட்டகம்.
4. சிங்கம். 5. புலி. 6. எருமை.

பவழவல்லி

கி. ரா.

சஞ்சலா என்ற மந்திரவாதியின் மகள் கிளி உருவில் இருந்த சுந்தரத்தைக் கொண்டு போய் ஒரு பித்தளைக் கூண்டில் அடைத்து ஓர் அறைக்குள் கட்டித் தொங்க விட்டிருந்தாள். அந்த அறை மலைக் குகையைப்போல் பாறையில் குடையப்பட்டிருந்தாலும் அழகான தூண்களும், விசித்திரமான பொம்மைகளும் நிறைந்து காற்றோட்டமாய் இருந்தது. ஜன்னல் வழியாகப் பார்த்தால் நூதனமான செடிகளும் கொடிகளும் நிறைந்த பூங்காவனம் தெரிந்தது. அந்த அறையில், சுற்றிலும் சிலந்திப் பூச்சியின் வலைகளில் பின்னிய திரைகள் தொங்கின.

பித்தளைக் கூண்டை மாட்டியதும் சஞ்சலா போனதும் சுந்தரம் சுற்றிலும் பார்வையைச் செலுத்தினான். அந்த அறையில் இன்னும் அநேக சங்கிலிகள் தொங்கின. ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொரு கூண்டு தொங்கிற்று. அவைகளில் சுந்தரத்தைப் போலவே கிளிகளும் குருவிகளும் புருக்களும் அடைக்கப்பட்டிருந்தன.

அவர்களும் தன்னைப்போல் மந்திரவாதியால் உருமாற்றப் பட்ட மனிதர்களாய்த்தான் இருக்கவேண்டும் என்று சுந்தரம் நினைத்தான். ஆனால் அவர்கள் எல்லாம் அவன் நினைத்தபடி மனிதர்கள் அல்ல என்பது பின்னால்தான் தெரிய வந்தது.

ஒரு புருவும், ஒரு குருவியும் தங்களுக்குள்ளாகவே பேசிக் கொண்டன. தலையைக் குனிந்துகொண்டிருந்த சுந்தரம் அவைகள் பேசுவதைக் கவனித்தான்.

"புது ஆசாமி மனிதன்போல் அல்லவா தோன்றுகிறது?" என்றது புரு.

"நம்முடைய உலகத்துக்கு மனிதன் எப்படி வந்தான்?" என்று கேட்டது குருவி.

"எப்படி வந்தால் என்ன? இங்கே வந்து அகப்பட்டுக் கொண்டது பவழவல்லிக்காகத் தான் என்று தெரியவில்லையா?"

"பவழவல்லியின் அழகு யாரையும் மயக்கிவிடும்."

சட்டென்று பேச்சு நின்றது. யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. சுந்தரமும் கவனித்தான்.

சஞ்சலா கையில் ஒரு தட்டுடன் வந்தாள். அதில் ஒரு சிப்பு வாழைப்பழமும், கிண்ணத்தில் பாலும் இருந்தன. நேராகச் சுந்தரத்திடந்தான் வந்தாள்.

கூண்டைத் திறந்தாள். பழத்தையும் பாலையும் அதற்குள் வைத்தாள். சுந்தரம் அவளை நிமிர்ந்தே பார்க்கவில்லை. மூக்கை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"சாப்பிடு. எங்களுடைய விருந்தாளிகளை நாங்கள் பட்டினி போடுவதில்லை" என்று சொல்லிக்கொண்டே கதவை மூடிவிட்டுச் சென்றாள்.

சுந்தரத்துக்குச் சாப்பாட்டில் மனம் செல்லவில்லை. தனக்கு நேர்ந்த கதியை நினைத்து வருத்தப்பட்டான். அவன் பீச்சுக்கு வந்து உட்கார்ந்ததும், அங்கிருந்து தன்னை அறியாமலே தண்ணீருக்குள் இழுத்துச் செல்லப்பட்டதும், அதன் பின் நடந்த நம்பமுடியாத அதிசயங்களும் அவனுக்கு நினைவுக்கு வந்தன. பவழவல்லி என்ற அழகான பெண்ணைக் காப்பாற்றவேண்டும் என்ற எண்ணத்துடன் அவன் அங்கு வந்தான். இப்போது அவனையே யாராவது காப்பாற்ற வேண்டிய நிலைமை வந்துவிட்டது. ஆமையின் பேச்சைக் கேட்டிருந்தால் அவன் கிளியாக மாறியிருக்கவேண்டாம். 'இப்போது அந்த ஆமை என் வரவில்லை?' என்று நினைத்தான்.

அப்போது, "என்ன கிளியே, அவ்வளவு யோசனை?" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான். எதிரில் சஞ்சலா நின்றுகொண்டிருந்தாள். அப்போதுதான் அவளை நன்றாகப் பார்த்தான்.

முதலையின் தோலைப்போல் பளபளப்பான தங்க ஆடையை அணிந்திருந்தாள் அவள். காதுகளிலிருந்து தொங்கிய சிலந்திக் கூட்டைப் போன்ற குண்டலங்கள் தோள்களைத் தொட்டன. அவளுடைய தலையை அலங்கரித்த அரை வட்டமான நவரத்தினப் பூவைப் பார்த்ததும் சுந்தரத்துக்குச் சினிமா நட்சத்திரங்களின் ஞாபகம் வந்தது. அவளுடைய உதட்டுச் சிவப்பும் சிரிப்பும் பேச்சும் நடிகைகளைப் போலவே இருந்தன.

"ஆகாரங்கூட அருந்தாமல் அப்படி என்ன யோசனை?" என்று அவள் அவனுடைய மூக்கைத் தொட்டு நிமிர்த்தினாள். சுந்தரத்துக்கு அருவருப்பாய் இருந்தது. மூக்கை வெடுக்கென்று திருப்பிக் கொண்டான்.

"அடேடே! என்னைக் கண்டால் பிடிக்கவில்லையா உனக்கு?" என்றாள் அவள். பிறகு கூண்டைத் திறந்து, "இதோ பிடிக்கும்படி செய்கிறேன்" என்று கிளியைக் கையில் எடுத்துக்கொண்டு போனாள்.

வெளியில், நந்தவனத்தில் நிலவு பால்போல் காய்ந்தது. அன்று பௌர்ணமி.

சுந்தரத்தைக் கொண்டு போன சஞ்சலா அவனை ஒரு பளிங்கு மேடைமீது வைத்தாள். பிறகு அவன் தலையில் கையை வைத்து ஏதோ முணுமுணுத்தாள். என்ன ஆச்சரியம்! உடனே சுந்தரம் சுய உரு அடைந்தான்.

அவனைக் குறிப்பாகப் பார்த்து, "இப்போது என்னைப் பிடிக்கிறதா, சொல்லு!" என்று சிரித்தாள்.

சுந்தரம் என்னவோ குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தான்.

"பசுங்கிளியே! என் அப்படி உட்கார்ந்திருக்கிறாய்? பேச

மாட்டாயா?" என்றாள் கேலியாக.

"கிளியாய் இருந்தாலும் பறந்து ஓடிவிடலாம். இப்போது எப்படி ஓடுவது என்று தெரியவில்லை" என்றான் சுந்தரம்.

அதைக் கேட்ட சஞ்சலா கலீரென்று சிரித்தாள். பிறகு, "நீ எப்படி இருந்தாலும் இங்கிருந்து தப்ப முடியாது. அப்பாவின் பூதங்கள் நாலு பக்கமும் காவலாய் இருக்கின்றன" என்றாள்.

"என்னை எதற்காக இங்கே அடைத்து வைத்திருக்கிறீர்கள்?"

"அப்பா எதற்காக உன்னைப் பிடித்தார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான் வைத்திருப்பதற்குக் காரணம் இருக்கிறது."

"என்ன காரணம்?"

"அதைச் சொல்ல முடியாது!" என்று கள்ளத்தனமாக அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"அப்பா பிடித்த காரணத்தை நான் சொல்லுகிறேன் கேள். பவழவல்லி என்ற ராஜகுமாரி

கல்லாக இருக்கிறாள். அவளு
டைய சாபத்தை நீக்க, தந்
பெட்டிக்குள் இருக்கும் பத
கத்தை எடுத்துப் போக வ
தேன். தவறிப் போய்த் தங்
அன்னத்தைப் பொன் கூண்டுக்
குள் அடைத்து விட்டேன்.
அகப்பட்டுக் கொண்டேன்..."
என்று சுந்தரம் சொன்ன
தான் தாமதம்; சஞ்சலா அள
மீறிய ஆத்திரத்துடன், "என்ன
சொன்னாய்? அந்தப் பவழ

காரியை மீட்கவா வந்தாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று பல்லை நறநற வென்று கடித்தாள்.

அவளுடைய கோபத்தைக் கண்ட சுந்தரத்துக்கு ஆச்சரிய மாய் இருந்தது. "உண்மை யைச் சொன்னால் ஏன் இவ் வளவு கோபம் வருகிறது?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான்.

"உன்னை நான் ஒன்றும் தெரி யாத வாலிபன் என்று நினைத் தேன். நீ ஒரு சூதுக்காரன்!"

"என்ன சூது செய்தேன்?"

"உன்னை இங்கே அனுப்பி இந்த மர்மத்தையெல்லாம் சொல்லிக் கொடுத்தது யார்?"

சுந்தரம் கொஞ்சம் தயங்கி னான். பிறகு கண்டிப்பான குர லில், "அதைச் சொல்ல முடி யாது" என்றான்.

சஞ்சலா சமீபத்தில் வந்து, "அதைமட்டும் சொல்லிவிடு. உன்னைத் தப்ப வைத்துவிடுகி றேன்" என்றாள்.

"உதவி செய்தவர்களைக் காட்டிக் கொடுப்பது எங்க ளுக்கு வழக்கம் இல்லை!"

"இல்லாவிட்டால் நீ உயிர் தப்ப முடியாது!"

"அதைப்பற்றி அக்கறை இல்லை!"

"அப்படியா!" என்று ஆத்தி ரத்துடன் அவள் கையை ஓங்கி னாள். சுந்தரம் மீண்டும் கிளி யானான்.

அதைத் தூக்கிக்கொண்டு சஞ்சலா விடுவிடென்று உள்ளேயே போனாள். அவ

ளைக் கூண்டுக்குள் அடைத்து விட்டு வேகமாக வெளியில் சென்றுவிட்டாள்.

சுந்தரம் யதேச்சையாகத் திரும்பிப் பார்த்தான். அவள் போன அவசரத்தில் கூண்டுக் கதவைப் பூட்டாமல் போய் விட்டாள்.

அதைப் பார்த்ததுதான் தாமதம். சுந்தரம் யோசனை செய்யாமல் சட்டென்று மூக்கினால் கொத்தினான். கூண்டுக் கதவு திறந்துகொண்டது. வெளியில் வந்து பறந்தான்.

சுந்தரம் அரண்மனைக்கு மேலே வெகு உயரமாக எழும்பிப் பறந்தான். எந்தத் திக்கில் போவது என்று தெரியாமல் மனம்போன வழியில் வாயு வேகமாகப் பறந்து சென்றான்.

ஐந்து நிமிஷத்தில் மலைகள் நிறைந்த அந்த நாட்டி எல்லையை அடைந்து வி டான். நல்ல வேளை. மந் வாதியின் பூதங்கள் ஒன்று எதிரில் வரவில்லை.

சற்று நேரத்தில் அல்லி குளத்தங்கரையில் உள்ள அர மரத்தடியை அடைந்து அதில் சிறிதுநேரம் இளைப்பாற உட் கார்ந்தான்.

அப்போதுதான் தூரத்தில் அவனைத் தூக்கிச் சென்ற பூத மனிதன் வருவது தெரிந்தது. அந்த உருவத்தைக் கண்டதும் சுந்தரத்துக்குத் திகில் ஏற் பட்டது. அவனிடமிருந்து எப் படித் தப்புவது? ஒரு வழியும் தெரியாமல் சுந்தரம் கிலிபிடித் தது போல் உட்கார்ந்திருந் தான்.

(தொடரும்)

கண்ணாடியில் பிம்பம்

லீலா கதவு இருக்கும் பக்கமாக ஓர் அறையின் மூலையில் உட்கார்ந்திருந்தாள். யாராவது சிநேகிதி கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தால் அவளை நேரே பார்க்காமல் மறைவாக இருந்து கவனிக்க வேண்டும் என்றுதான் இப்படிச் செய்தாள். ஆனால் வருகிறவள் யாரென்று தெரிய வேண்டுமே; அதற்காக எதிர்ச் சுவரில் ஒரு கண்ணாடியை மாட்டினாள். இவள் உட்கார்ந்திருக்கும் இடத்திலிருந்து பார்த்தால் இவளுக்குத் தன் முகம் கண்ணாடியில் தெரியாது. ஆனால் சிநேகிதியின் முகம் மட்டும் அதில் தெரியும். சற்று நேரம் கழித்துப் பாலா வருவது தெரிந்தது. அவளைத் திடீரென்று எதிர்கொண்டழைக்க வருபவள் போல லீலா எழுந்து வந்தாள். ஆனால் நேருக்கு நேர் சந்திக்கு முன்பே ஒருத்தி முகம் இன்னொருத்திக்குத் தெரிந்து விட்டது. கண்ணாடியின் எதிரே வந்தபோதுதான் அவர்களால் தங்கள் இருவரையும் சேர்ந்து பார்த்துக்கொள்ள முடிந்தது. அதற்கு முன்பு முடியவில்லை. இது ஏன் என்று தான் அவர்களுக்குப் புரியவில்லை. பெரிய புதிராக இருந்தது. உங்களுக்காவது காரணம் தெரியுமா?

காரணம்: சிநேகிதியின் உருவமும் உள்ளே இருக்கும் பெண்ணின் உருவமும் ஒரே கோணத்திலிருந்து பிரதிபலிக்கின்றன. அதுதான் காரணம்.

ஜக்கு

'ஆர்வி'

வரவேற்பு

ஜக்குவுக்குத் தஞ்சாவூர் ஸ்டேஷனில் குதூகலமான வரவேற்புக் கிடைத்தது. அவன் ஒருவருக்கும் தெரியாமல் லயன்கரை வழியாக ஊருக்குள் இறங்கிப் போய்விடலாமென்று எண்ணினன். ஆனல் ஸ்டேஷனில், "இதோ இருக்காண்டா ஜக்கு!" என்று ஒரு குரல் வீச்சென்று கேட்டது.

திரும்பிப் பார்த்தால், சீதாராமன் கையில் ஒரு சின்ன மாலேயுடன் வண்டிக்குள் ஏறி வந்து கொண்டிருந்தான்.

யாரோ பெரிய தலேவர் வந்திருக்கிருர் என்று நினேக்கும்படி தடபுடல் பட்டது ஸ்டேஷன்.

மாலே போட்டதும் கை தட்டல்; கோஷம்; காமிரா கிளிக்.

பெரிய காரியத்தைச் சாதித்து விட்ட தீரன்போலவும், போரை நடத்தி வென்ற சூரா வீரன் போலவும், ஜக்கு வண்டிக் கதவருகில் நின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் அந்த எஞ்சின் டிரைவர் வேறே இறங்கி வந்து, "பலே ஜக்கு! நான் போயிட்டு வரட்டுமா? ஞாபகம் வச்சுக்கிறியா?" என்று கைகுலுக்கி விட்டுப் போனன்.

இதைப் பார்த்தவர்கள், 'இந்தப் பையன் யாரோ, என்னவோ!' என்று அசந்து போனார்கள்.

சுப்புணியும் மணியும் ஓடி வந்து ஜக்குவின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "ஏதாவது இரண்டு வார்த்தை பேசேன்" என்றார்கள்.

ஜக்கு அந்தச் சமயத்தைக் கைவிடாமல், "நண்பர்களே! இதெல்லாம் என்ன? நான் உங்களைப் போல ஒருவன்தானே! பார்ப்பவர்களுக்கு நான் யாரோ மானத்திலிருந்து குதித்தவனோ என்று தோன்றும். எனக்கு என்னமோ மானத்திலிருந்து குதித்தவனாகத் தோன்றாவிட்டாலும் மானத்தில் போய்க் குதித்தவன் போல இருக்கிறது. இந்த உங்கள் திருப்தியைக் கெடுக்க எனக்கு விருப்பமில்லை. அதனால் உங்கள் வரவேற்பை நான் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்கிறேன். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்றான்.

மறுபடியும் கை தட்டல். அவன் தன்னைக் குறைத்துக் கொண்டு பேசியது மிகவும் கம்பீரமாய் இருந்தது.

எல்லாரும் கைதட்டி முடிந்த பிறகு, கடைசியாக ஒரே ஒரு கைதட்டல் மட்டும் தனியாகக் கேட்டது. எல்லாரும் பார்த்தார்கள். அம்புலு!

ஜக்கு கிடுகிடென்று கீழே இறங்கி வந்து அவள் கையைப் பிடித்துக்கொண்டு, "அடி அம்புலு, நீயும் வந்திருக்கிறாயா? உன்னை யார் வரச் சொன்னது?" என்றான்.

அம்புலு திரும்பினாள். அங்கே அவளை அழைத்துக்கொண்டு வந்திருந்த ஜக்குவின் அப்பா எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றிருந்தார். ஜக்குவுக்கு ஒரே அவமானமாகப் போய்விட்ட[து]. மாலையைக் கழற்றி அம்பு[லு]விடம் கொடுத்து வி[ட்டு] வெளியே போய்விட்டான்.

அம்புலுவை அன்[று] சாயங்காலம் அவன் பார்க்[க] போனபோது அவள் மு[கம்] வாட்டமாய் இருந்தது. அவ[ள்]

கொண்டு வந்த பொம்மையைக் கூட அவள் தொடவில்லை. ஜக்கு திடுக்கிட்டு, "ஏன் வாட்டமாய் இருக்கே?" என்று கேட்டான்.

"உன்னை ஒண்ணும் கேக்கலே போ அதுக்கு!" என்றுள் அம்புலு.

"நீ கேட்காவிட்டாலும் நானு கத்தான் கேட்கிறேன். சொல் லேன்" என்றுன் ஜக்கு.

"நான் அப்படித்தான் இருப் பேன், உனக்கென்ன?" என் ருள் அம்புலு.

"அப்படி இருக்கக்கூடாது என்றுல் கூடாதுதான்."

"ரொம்பத்தான், எப்பப் பார்த்தாலும் அதிகாரம் பண்றியோ? 'உன்னை யார் வரச் சொன்னதுன்னு கேட் டயே. உன்னைக் கேட்டுண்டு தான் வரணுமோ ஸ்டேஷ னுக்கு?"

"ஓகோ அதுதான் கோபமா? நீயும் அதிகாரம் செய் யேன். உன்னை யார் வேண் டாம் என்றது?"

"பின்னே 'அடி புடி' என் கிறயே. அது மட்டும்?"

"அதனுல் என்ன தப்பு? நீ 'அடா புடா' என்று சொல் லேன். அவ்வளவுதானே!"

"சீச்சி, நான் எதுக்காக அப்படிச் சொல்றதாம்?"

"பின்னே எதற்காக இப்படி உம்மணுமூஞ்சி மாதிரி 'உம்' என்று உட்கார்ந்திருக்கிற தாம்!"

அவன் 'உம்' என்று முகத்தை வைத்துக் காட்டிய தும் அவள் சிரித்துவிட்டாள். "ஹார்பரிலே எடுத்த போட்டோவிலேகூட இப்ப டித்தான் இருக்கு உன் மூஞ்சி!" என்றுள், சிரிப்பை மறைக்க.

ஜக்கு உடனே, "ரொம்ப ஜோராய் இருந்தது போட்டோ என்று எனக்கு எழுதியிருந் தயே?" என்று கேட்டான்.

அதற்கு அம்புலு, "அப்படித் தான் எழுதுவேன் போ" என்று சிணுங்கிக்கொண்டே சொல்லி விட்டு, எழுந்து உள்ளே ஓடி ஞள்.

ஒரு வாரம் சென்றது. பள்ளிக்கூட நேரம் போக மற்ற நேரங்களில் எல்லாம் ஜக்கு வெகு சுறுசுறுப்பாக இருந்தான். அதன் பலனுகச் சிறுவர் சங்கம் ஏற்பட்டு விட்டது.

கௌரவத் தலைவராக இருக் கும்படி அவன் ஹெட்மாஸ்ட ரைக் கேட்க நினைத்தான். அவரைப் பார்க்கப் போகவே எல்லாருக்கும் பயம். ஆனுல் ஜக்கு தைரியமாகப் போனுன்.

"நீதானேடா ஜக்கு என்கிற வன்?" என்றுர் ஹெட்மாஸ்டர்.

"ஆமாம் ஸார்."

"சென்னைக்குப் போய் ரொம்ப ரகளை எல்லாம் செய் தாயாமே நீ?"

"அதெல்லாம் இல்லே, ஸார்!"

"பின்னே உன் போட்டோ பத்திரிகைகளில் கூட வந் ததே?"

"ஆமாம் ஸார்."

"நம் ஊர்ப் பெயரைக் கெடுத்தாயா, பெயரைக் காப் பாற்றினுயா?"

"இல்லே, சார். ஆமாம், சார்."

"எதற்காகவடா இந்தச் சிறுவர் சங்கம்?"

"அது வந்து சார் - உங்களுக் குத் தெரியாதா சார் - சென் னையிலே இப்படிப்பட்ட சங்கங் கள் நிறைய இருக்கு சார். குழந்தைகள் பத்திரிகை, புஸ் தகம் வாங்கிப் படிப்பது, ஒற்று மையாய் இருப்பது, சேர்ந்து தேகப் பயிற்சி விளையாட்டுகள் விளையாடுவது, பையன்களுக் குள்ளே ஒரு ஸ்போர்ட்டிங் ஸ்பிரிட் ஏற்படச் செய்வது, அப்புறம் எக்ஸிபிஷன், நாடகம் மீட்டிங் எல்லாம் நடத்துவது, இதெல்லாந்தான் சார்."

"பேஷ் பேஷ்! அதற்கு நான் எதற்கடா தலைவராய் இருப் பது! பள்ளிக்கூடத்திலேதான் என் தொந்தரவு என்றால் உங் கள் சங்கத்திலேயும் என் தொந் தரவு எதற்கடா?"

"நீங்க அப்படிச் சொல்லப் படாது சார்."

"பின்னே?"

"நீங்க தலைவர் என்றுல்தான் சார், எங்களுடைய அப்பா அம்மா எல்லாரும் நம்பிக்கைப் படுவார்கள்."

"ஓகோ! அதற்கு என்னை உபயோகப்படுத்திக் கொள் ளப் பார்க்கிருயா?"

"அது மட்டுமில்லே ஸார்! நீங்களும் எங்களை, 'இப் படிச் செய்யுங்கடா, அப்படிச் செய்யுங்கடா' என்றுல் எங்க ளுக்கு எவ்வளவு நன்மையாய் இருக்கும்! அதுக்காகத்தான் ஸார்."

"சபாஷ். உன் மனசைச் சோதனை பண்ணிப் பார்த்தேன். இவ்வளவு கெட்டிக்காரனுக இருக்கிருயே நீ? பெரியவன் ஆனல் பெரிய லீடராகிவிடு வாய் போலிருக்கிறதே! ஆமாம், படிப்பில் எப்படி என்று உன் வகுப்பு வாத்தியாரைக் கேட் டுப் பார்க்கிறேன்."

அவனுடைய நல்ல காலமாக அவன் வகுப்பு வாத்தியார்

ராந்தாவில் நின்று கொண்டிருந்தார்.

"ஏன் ஸார், இவன் உங்க ஸ்டூடண்ட்தானே?" என்று விசாரித்தார் ஹெட்மாஸ்டர்.

"ஆமாம், என்ன விஷயம்?"

"இவன் படிப்பில் எப்படி ஸார் இருக்கிறான்?"

"இவனா?" என்று கேட்டுவிட்டு வகுப்பு வாத்தியார் ஆங்கிலத்தில், "பிரமாதமாய்ப் பேசுவான், இருப்பான். படிப்பிலும் கெட்டிக்காரன்தான்" என்றார்.

ஜக்கு பேசாமல் நின்றான்.

"அவர் என்ன சொல்றார், பார்த்தியா? பேச்சோடு சரி என்கிறாரே" என்றார் ஹெட்மாஸ்டர் சிரித்துக்கொண்டு.

ஜக்கு, "அவர் சொன்னது எனக்கும் புரிஞ்சது ஸார்" என்றான் அடக்கமாக.

"சரி, அடேடே, அப்படியா? ஓடு, உன்னிஷ்டப் படியே போட்டுக் கொள்!" என்றார் ஹெட்மாஸ்டர், அவன் முதுகில் தட்டிக் கொடுத்து.

வெளியிலே முடிவை எதிர்பார்த்து மற்றப் பையன்கள் நின்றுகொண்டிருந்தார்கள். ஜக்கு வெற்றியுடன் திரும்பி வந்ததைக் கண்டு ஒருவன் அவனை அப்படியே அலாக்காகத் தூக்கினான். இன்னொருவன் கீழே பிடித்து இழுத்தான். மற்றவர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டார்கள்.

ஜக்கு சங்கத்தின் காரியதரிசியாக ஆனான். பெரியவர்கள்கூட அவன் காரியதரிசியாவதை வரவேற்றார்கள்.

அந்த வருஷம் அவன் எக்ஸிபிஷனுக்கு ஏற்பாடு செய்தான். மின்சார ரெயில் என்ன, பேசும் கிளி என்ன, வயர்லெஸ் செட் என்ன - இப்படி எத்தனையோ மின்சார விந்தைகளும் வேடிக்கை அற்புதங்களும் விநோத சாமான்களும் நிறைந்திருந்தன எக்ஸிபிஷனில். "இதைப்போல வேறு எங்குமே பார்த்ததில்லை" என்று பெரியவர்கள்கூட ஒருமுகமாக அவனைப் பாராட்டினார்கள்.

"அடேய், இவ்வளவெல்லாம் செய்துவிட்டு அடுத்த வருஷம் இந்த ஊரைவிட்டு மயிலாப்பூருக்குப் படிக்கப் போனாயோ, அப்புறம் தெரியும் சேதி?"

"என்ன செய்வீர்கள்?"

"நாங்களும் உன்கூட வந்துவிடுவோம். அவ்வளவுதான்."

எல்லோரும் சிரித்தார்கள்.

அம்புலுகூடச் சொன்னாள்: "என்னைவிட உனக்கு அந்த நந்து ரொம்ப உசத்தியாய்ப் போயிட்டானே? எங்களையெல்லாம் விட்டுட்டு நீ அங்கே படிக்கிறதுக்காகப் போகவே கூடாது. ஆமாம்; சொல்லிப்புட்டேன்!"

"ஏது, உத்தரவு ரொம்பக் கடுமையாக இருக்கிறதே!"

"அதுக்கு நான் என்ன பண்றது? உனக்கும் தெரிஞ்சால் நீயும் கடுமையாக உத்தரவு போடேன் எனக்கு!" என்றாள் அம்புலு.

"இரு இரு" என்று சிரித்துக்கொண்டே போனான் ஜக்கு.

அந்த வருஷம் அந்த ஊர்ச் சங்கத்தின் பெயரை அடிக்கடி நீங்கள்கூடப் பத்திரிகைகளில் பார்த்திருக்கலாமே!

மறைந்த மோதிரம்

நாக. சுப்பையா

"டேய், உன்னைத்தாண்டா! வாங்கிய கடனைக் கொடுக்க வக்கில்லேனாலும், ஜம்பமா, கேட்காதவன் போலப் போறியேடா! என்னை யாருன்னு நினைச்சே? மரியாதையோடே நாளைக்குப் பணத்தைக் கொடுக்கல்லே அப்புறம் நடக்கிறது வேறே!" என்று வீதியில் போய்க்கொண்டிருந்த கிட்டுவைப் பார்த்துச் சொன்னான் ராஜு.

கிட்டுவுக்கு, போட்டோ என்றால் உயிர். அதனால்தான் நான்கு மாதங்களுக்கு முன் ராஜுவிடமிருந்து ஒரு புதுக் காமிராவைக் கிட்டு வாங்கினான். மதுரையில் அவன் மாமா காசுக்கடை வைத்திருந்தார். அவரிடமிருந்து பணம் வரவழைத்துக் கொடுத்துவிடலாம் என்ற தைரியத்தில்தான் வாங்கினான். ஆனால் மாதம் நாலு ஆகியும் மாமாவிடமிருந்து பணத்துக்கு ஒரு தகவலும் கிடைக்கவில்லை. கிட்டு பணத்துக்கு இழுத்துப் போட்டுக்கொண்டே வந்தான். ராஜு எத்தனை நாள்தான் பொறுப்பான்?

நாலு பயல்கள் இருக்கிற இடத்திலே இந்த மாதிரி தன்னை அவமானப்படும்படி கேட்டுவிட்டான் என்று கிட்டுவுக்கு ரோசமாய் இருந்தது. பணத்துக்கு அப்பாவிடம் கேட்டாலோ சொல்லவேண்டாம். விசுவாமித்திரர் ஆகிவிடுவார். காமிராவையாவது அந்தப் பயல் முகத்தில் வீசி எறிந்துவிடலாமென்றாலோ அதுதான் அவனிடம் இருந்ததா? அதுவும் திருவிழாவின்போது தொலைந்துவிட்டது.

'விடிந்ததும் அந்தப் போக்கிரிப் பயல் நேரே வீட்டுக்கு வந்துவிட்டால்-? அப்பாவுக்கு இந்த விஷயம் தெரிந்து போனால்? அப்புறம் - அப்புறம் என்ன? உரித்து உப்பைத் தடவிவிடுவார். அப்படியானால் இதிலிருந்து தப்ப வழி?' - இவ்வித எண்ணங்கள் அவன் உள்ளத்தில் எழுந்ததன் விளைவு அன்றிரவு அவனுக்குத் தூக்கம் கெட்டதுதான்! கடைசியில் அவனுக்கு ஒரு குயுக்தியான யோசனை தோன்றியது. விடிந்தால் வெள்ளிக்கிழமை. அம்மா எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் நாளும் அதுவே. விரலில் அணிந்திருக்கும் மோதிரத்தில் எண்ணெய் இறங்கிவிடாமலிருக்க அதைக் கழற்றி ஜன்னலில்தான் வைப்பாள். அப்பொழுது அதை எடுத்துக்கொண்டு போய் அந்தப் பயல் ராஜுவிடம் கொடுத்துவிட்டால் என்ன? கடன் ஒழிந்தது. ஆனால் அம்மா இதைக் கண்டு பிடித்துவிட்டால்?



கொக்கரக்கோ! கிட்டு படுக்கையை விட்டு எழுந்தான். காலைக் கடன்களை முடித்துக் கொண்டான். சாப்பிட்டான். அம்மா குளிக்கப்போகும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அம்மாவும் மோதிரத்தைக் கழற்றி வைத்து விட்டாள்.

வெளியே ஒரு பிச்சைக்காரன் போகிறான். அவனுக்குத்தான் என்ன ஆனந்தம்! என்னவோ பாடுகிறானே!

"நல்ல சமயமடா! இதை நழுவவிடுவாயோ......ஓஓ!"

ஆம், இது நல்ல சமயந்தான்! இது சமயம் தவறினால் மறு சமயம் வாய்ப்பது அரிது. உடனே போய் மோதிரத்தை எடுத்து விடவேண்டியதுதான்.



ராஜுவின் வீட்டை நோக்கிச் சென்றான் கிட்டு. அங்கு வீட்டுத் திண்ணையில் ராஜுவின் அப்பா நின்றார். "ராஜு இருக்கிறானா, மாமா?" என்றான் கிட்டு. "இதோ வரச்சொல்கிறேன்" என்றார் அவர். ராஜு வெளியே வந்தான்.

ராஜு: (மெதுவான குரலில்) பணம் கொண்டுவந்தாயா?

கிட்டு: பணம் இப்போ இல்லை. அதுக்குப் பதிலாக இதோ பாரு...!

ராஜுவின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. "ஏண்டா நம்ம வீட்டாருக்கு இந்த விஷயம் தெரிந்தால்?" என்றான்.

கிட்டு: பழியைச் சுமப்பதற்கு எவனாவது ஒருத்தன் அகப்படு

வான். அதுவும் தவிர நீங்க ளெல்லாம் இன்னும் ஒரு மாதத்தில் மதுரை போய்விடுவீர்களே. அங்கே போனதும் விற்றுவிடேன். இதுக்கென்னவோ முழிக்கிறயே! சரி, நான் போறேண்டா! நேரமாகிறது.

* * *

அம்மா குளித்துவிட்டு மோதிரத்தை அணிந்துகொள்ள வந்தாள். வைத்த இடத்தில் காணவில்லை. 'ஐயையோ! மோதிரம் எங்கே! மாயமாக இருக்கிறதே!' என்று வீடெல்லாம் தேடிவிட்டு, கணவனிடம் சென்று சொன்னாள்.

அப்பாதான் விசுவாமித்திரர் ஆச்சே! கோபத்திலே கூப்பிட்டார் வேலைக்காரனை. "டேய், வேலாண்டி இதோ பாரு, மரியாதையோடே மோதிரத்தைக் கொடுத்துவிடு. அப்புறம் போலீஸ் கீலீஸ்னு தொந்தரவு" என்று மிரட்டினார்.

"இல்லே சாமி! சத்தியமாச் சொல்றேன். நான் எடுக்கலிங்க! அதை நான் கறுப்பா, சிவப்பான்னு கண்ணாலே கூடக் காணலிங்க!"

"என்னடா, சத்தியம் கித்தியம்னுக்கிட்டு. காலணாக் காசுக்காகக் காளியைக்கூடத் தூக்கித் தலை கீழா நிறுத்துற காலமாச்சேடா! என்னவோ பேசுறியே! திருட்டுப் பயலுக்கு ஏதுடா சத்தியம், சாமியின்னுட்டு! சரி, சரி, நீ நம்மளுக்கு ஒழுங்குப்பட்டு வரமாட்டே! இதோ போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் பண்ண வேண்டியதுதான்."

வேலாண்டி மன்றாடினான்; மறுத்தான். அவனைத் தீர விசாரித்தார்கள்; சோதனை போட்டார்கள். முடிவு என்ன? பாவம், அவன் வேலையை விட்டுப் போய்ச் சேர்ந்தான்.

கிட்டுப் பயலை இதைப்பற்றி ஒன்றும் ஒருவரும் கேட்கவில்லை! அவனும் தப்பித்துக் கொண்டோம் என்று நினைத்துக் கொண்டான்.

* * *

இந்தச் சம்பவம் நடந்து மாதம் ஒன்று ஆயிற்று. ராஜுவின் குடும்பம் மதுரை சென்றுவிட்டது. ராஜுவோ செலவுக்கு மிகவும் முடைப்பட்டான். ஒரு நாள் மோதிரத்தை எடுத்துக்கொண்டு கடைக்குச் சென்றான். காசுக் கடையொன்றில் ஏறினான். அங்கு ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். அவன் சென்ற காசுக் கடை வேறு யாருடையதுமல்ல. கிட்டுவின் சாக்ஷாத் மாமாவினுடைய கடைதான் அது. அங்கு அமர்ந்திருந்தவர் அவன் மாமாதான்.

மோதிரத்தைப் பார்த்த பெரியவருக்கு அளவிட முடியாத ஆச்சரியம் உண்டாகிவிட்டது. அவர் சகோதரிக்குச் செய்துகொடுத்த மோதிரம் அவருக்குத் தெரியாதா? அவர் கடை முத்திரை வேறு அதில் இருந்தது.

அவர் ராஜுவைப் பார்த்து யார் எந்த ஊர் என்றெல்லாம் முதலில் விசாரித்துக் கொண்டார். பிறகு, "தம்பி, போயிட்டுக் கொஞ்ச நாழிகை கழிச்சு வா! முதலாளி வந்த

வுடன் காட்டி ரூபாய் வாங்கித் தாரேன்" என்று கூறி அவனை அனுப்பினர். உடனே தம் அத்தானுக்கு, அதுதான் கிட்டுவின் அப்பாவுக்கு, தந்தி கொடுத்தார்: "அத்தானுக்கு! உடனே வரவும். முக்கியமான விஷயம்."

அவ்வளவுதான். மறு நிமிஷம் பியூக் 308-இல் டாண் என்று வந்திறங்கினர் கிட்டுவின் அப்பா. "ஏதோ முக்கியமான விஷயம் என்ருயே! என்ன?" என்ருர்.

"ஒண்ணுமில்லே! ஆறு மாதத்துக்கு முன்பு அக்காளுக்குச் செய்து அனுப்பியிருந்தேனே, ஒரு மோதிரம், அது என்கிட்டேயே விலைக்கு வந்திருக்கே; என்ன சமாசாரம்? அதுக்குத்தான் வரச் சொன்னேன்."

"எங்கே, இப்படிக் கொடு. இது நம்முதுதான்! ஆமா, இதைக் கொண்டு வந்தவன் யாரு?"

"அதோ வர்ரான் ஒரு பையன்! அவன்தான் கொண்டு வந்தான். நீங்களே கேளுங்களேன் விஷயத்தை! எல்லாம் விளங்கிடறது."

"அட, இந்த வாண்டுப்பயல் எங்க ஊர் முத்து மகன் ராஜூ! ஏண்டா, என்னடா விஷயம்?"

ராஜூ ஆதியோடந்தமாய் நடந்ததைச் சொல்லிவிட்டான். காமிராவுக்கு உரிய விலையாகிய ரூபாய் தொண்ணூறும் சுளையாகப் பெற்றுக்கொண்டான்; போய்விட்டான்.

கிட்டுவின் அப்பா கோபத்தோடு வீட்டுக்குள் நுழைந்தார். விளையாடப் போயிருந்த கிட்டு திரும்பி வந்தான்.

அவர், "டேய் கிட்டு! முன்னே தொலைஞ்சு போன மோதிரம் அகப்பட்டு விட்டதடா? இதோ பாரு. வேலாண்டி வீட்டார் விற்க வந்தபோது கையுங் களவுமாகப் பிடிபட்டார்கள்" என்ருர்.

"அந்த வேலாண்டிப் பயதான் எடுத்திருப்பான்னு எனக்கு அன்னைக்கே ஒரு சந்தேகம். அவன் பெரிய குல்மால்..." என்று அளக்க ஆரம்பித்தான் கிட்டு.

அவன் அப்பா சடாரென்று எட்டிப் பிடித்தார் கிட்டுவின் காதை. "ஏண்டா, திருட்டுப் பயலே, அவன் குல்மால் இருக்கட்டும்; உன் குல்மால் வெளிப்பட்டுப் போச்சுடா இப்போ!" என்று அவன் காதைத் திருக ஆரம்பித்தார். கிட்டுப்பயல் அழுதுகொண்டே, "இனிமேல் இந்த மாதிரியெல்லாம் திருட்டு வேலை செய்யலை, அப்பா" என்று கெஞ்சினுன்.

"அவனை ஏன் இப்படிப் போட்டு வதைக்கிறீர்கள்? சிறு பிள்ளைதானே! ஏதோ தெரியாமல் செய்துவிட்டான். இனிமேல் செய்ய மாட்டான்" என்று அந்தப் பக்கம் கிட்டுவின் அம்மா அவனுக்கு ஆஜரானதால் அந்தக் கைதியின் முதுகுத் தோல் நீதிபதியின் தண்டனையிலிருந்து விடுபட்டது.

நாலு பிள்ளைகள்

'வாசகன்'

விநோதபுரத்தில் இருந்த குபேரவர்மருக்கு ஓர் அழகிய பெண் இருந்தாள். அவளை அழகும் செல்வமும் கல்வியும் நிறைந்த ஒருவனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டுமென்று எண்ணினர். அவருடைய தங்கை பிள்ளை ஒருவன் இருந்தான். அவனுக்குக் கல்வியும் அழகும் இருந்தாலும் அதிகமான செல்வம் இல்லை. குபேரவர்மருடைய பெண் தன் அத்தை மகனையே கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டாள். ஆனால் தன் தகப்பனர் என்ன சொல்வாரோ என்ற பயத்தால் தன் எண்ணத்தை வற்புறுத்திச் சொல்லவில்லை.

விவேகபுரம் என்ற நகரில் செல்வர் ஒருவர் இருந்தார். ரகுவீரர் என்பது அவர் பெயர். அவர் குமாரன் எல்லா வகையிலும் சிறந்தவன் என்ற செய்தி குபேரவர்மருக்குத் தெரிந்தது. அவனையே தம் மாப்பிள்ளையாக்கிக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தார். குபேரவர்மர் ஒரு காரியத்தை நினைத்தால் அதை எப்படியாவது முடித்துக் கொள்வார். அதிகாரமும் ஆள் பலமும் அவருக்கு அதிகம். அதனுல் யாராலும் அவருடைய விருப்பத்துக்கு விரோதமாக நடக்கப் பயப்படுவார்கள்.

தம்முடைய பெண்ணை ரகுவீரர் பிள்ளைக்குக் கொடுக்க எண்ணியிருப்பதை அவருக்குக் குபேரவர்மர் சொல்லியனுப்பினர். ரகுவீரருக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டமேயில்லை. ஆனாலும் பெரிய மனிதராகிய குபேரவர்மருக்கு அதிருப்தி உண்டாக்கவும் பயந்தார். இதற்கு என்ன செய்வது என்ற கவலையில் ஆழ்ந்து போனர். அவருடைய சம்மதம் வருமென்று குபேரவர்மர் காத்திருந்தார்.

ஒரு நாள் ரகுவீரரிடம் அவருடைய நண்பராகிய

புத்திசேகரர் வந்தார். எந்தச் சங்கடமான நிலையிலும் சாமர்த்தியமாகக் காரியத்தைச் சாதித்துக்கொள்வதில் அவர் மிகவும் கெட்டிக்காரர். அவர் வந்தபோது ரகுவீரர் வாடிய முகத்துடன் உட்கார்ந்துகொண்டிருந்தார்.

"என்ன ரகுவீரரே, இப்படியிருக்கிறீர்? எல்லாரும் சௌக்கியந்தானே?" என்று கேட்டார் புத்திசேகரர்.

"சேகரரே, நல்ல சமயத்தில் வந்தீர்கள். நான் மிகவும் சிக்கலான நிலையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன். அதிலிருந்து மீள வழி தெரியாமல் திண்டாடுகிறேன். நீங்கள்தான் ஏதாவது வழி சொல்ல வேண்டும்" என்று கூறி ரகுவீரர் தம் நண்பரிடம் விஷயத்தை விரிவாகச் சொன்னார்.

"குபேரவர்மரும் எனக்கு நண்பரே. நான் தந்திரமாக அவர் மனசை மாற்றிவிடுகிறேன். நீங்கள் கவலையே பட வேண்டாம்" என்று சொல்லிவிட்டுப் புத்திசேகரர் விநோதபுரத்துக்குப் போனார்.

அவரைக் கண்டதும் குபேரவர்மர், "வாருங்கள், வாருங்கள், சேகரரே! ஏது இவ்வளவு நாளாக இங்கே தலையே காட்டவில்லை? ஆனாலும் இப்போதாவது வந்தீர்களே; சந்தோஷம். நல்ல சமயத்தில்தான் வந்திருக்கிறீர்கள்" என்று வரவேற்றார்.

"அப்படியா? அந்த நல்ல சமயம் இன்னதென்று நான் அறியலாமோ?" என்று கேட்டார் புத்திசேகரர்.

குபேர: உங்களுக்குத் தெரியாமலா? நம்முடைய குழந்தை கமலினிக்குக் கல்யாணம் நடக்கப் போகிறது. நீங்கள் இல்லாமல் திட்டம் போடுவது எப்படி?

புத்தி: அப்படியா! சந்தோஷம். மாப்பிள்ளை யார்?

குபேர: உங்களுக்கும் தெரிந்தவர்தான். விவேகபுரத்தில் இருக்கும் ரகுவீரர் பிள்ளை கமலநாதனுக்குத்தான் என் பெண்ணைக் கொடுக்கப் போகிறேன்.

புத்தி: (சிறிது யோசித்தபடியே) ஓஹோ! எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டீர்களா?

குபேர: இன்னும் அவரிடத்திலிருந்து பதில் வரவில்லை. வந்துவிடும்.

புத்தி: சரி; எங்கெங்கோ பிள்ளை பார்த்தீர்களே. கடைசியில் இந்த இடத்தைத்

தான் நிச்சயம் பண்ணினீர்களோ?

குபேர: ஏன், இந்த இடத்துக்கு என்ன குறைவு? பையன் அறிவாளி, வேண்டிய பணம் இருக்கிறது.

புத்தி: உங்களுக்கு ரகுவீரர் குடும்பத்தோடு நல்ல பழக்கம் உண்டா?

குபேர: பழக்கம் இல்லை. நாலுபேர் சொல்லிக் கேட்டது தான். நல்ல குடும்பம் என்று சொல்கிறார்கள்.

புத்தி: அவர் குடும்பம் பெரிதாயிற்றே; அது உங்களுக்குத் தெரியுமா?

குபேர: அவருக்கு ஒரே பிள்ளையென்று சொன்னார்கள். குடும்பம் எப்படிப் பெரிதாக இருக்கும்?

புத்தி: உங்களுக்கு உண்மை தெரியாதுபோல் இருக்கிறது. பெற்ற பிள்ளை ஒருவன் என்பது உண்மை. ஆனால் வளர்ப்புப் பிள்ளைகள் நாலு பேர் வேறு இருக்கிறார்களே! அந்த விஷயம் உங்களுக்குத் தெரியாதா?

குபேர: அதென்ன சமாசாரம்?

புத்தி: ஆமாம். அதனால் தான் அவர் குடும்பம் பெரிதென்று சொல்கிறேன். அந்தப் பிள்ளைகளுடைய சங்கதியைக் கேட்டால் இன்னும் ஆச்சரியப் படுவீர்கள்.

குபேர: இதென்ன சேகரரே, புதிய புதிய விஷயங்களெல்லாம் எடுத்து விடுகிறீர்களே! வளர்ப்புப் பிள்ளைகள் என்று சொன்னீர்கள்; அவர்கள் சங்கதி என்று எதையோ ஆரம்பிக்கிறீர்கள். அதையும் சொல்லிவிடுங்கள்.

புத்தி: அந்த வளர்ப்புப் பிள்ளைகளின் யோக்கியதையைத்தான் சொல்லுகிறேன். ஒரு பிள்ளை மரத்திலும் சுவரிலும் ஏறி நிற்கும். அவ்வளவு லட்சணம்!

குபேர: அவ்வளவு துஷ்டப் பிள்ளையா?

புத்தி: மற்றொரு பிள்ளை, பாம்பு போனால் உடனே போய்ப் பிடித்துக்கொள்ளும்.

குபேர: அதென்ன கண்ணராவி?

புத்தி: இன்னும் கேளுங்கள்: மூன்றாவது பிள்ளை நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருக்கும்.

குபேர: பைத்தியமோ?

புத்தி: என்ன காரணத்தை நான் எடுத்துச் சொல்வது? நாலாவது பிள்ளையை அவர் அடைத்து வைத்திருக்கிறார்.

குபேர: நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால், எல்லாம் பைத்தியக்காரக் கூட்டம் போலல்லவா இருக்கிறது? இதெல்லாம் உண்மைதானா?

புத்தி: நான் சொல்வதில் சிறிதும் சந்தேகம் இல்லை. வேண்டுமானால் வாருங்கள், நான் காட்டுகிறேன்.

குபேர: அப்படியானால், என்னுடைய தீர்மானத்தை மாற்றிக்கொள்ளத்தான் வேண்டும். நல்ல வேளை! நீங்கள் தக்க சமயத்தில் வந்து உண்மையைத் தெரிவித்தீர்கள். சரி, நான் பண்ணினது தவறு. என் தங்கைபிள்ளை இருக்கும் போது, வேறு பிள்ளையைத் தேடிக்கொண்டு போனேன். நமக்கு நன்றாகத் தெரிந்த இடத்தில் சம்பந்தம் செய்வதுதான் நல்லது என்று தெரியாமலா பெரியோர்கள் சொன்னார்கள்?

புத்திசேகரர் விடை பெற்றுக்கொண்டு சென்றார். கமலினிக்கு அவள் அன்புக்குகந்த அத்தைபிள்ளையையே குபேரவர்மர் கல்யாணம் செய்து வைத்தார்.

அதன் பிறகு அவர் ரகுவீரர் வீட்டில் வளர்ப்புப் பிள்ளைகள் யாரும் இல்லை என்று கேள்வியுற்றார். புத்திசேகரர் பொய் சொல்லியிருப்பார் என்று நம்பவும் முடியவில்லை. ஒரு நாள் புத்திசேகரரே வந்திருந்தார். குபேரவர்மர், "என்ன சேகரரே! ரகு

வீரர் குடும்பத்தைப்பற்றி நீங்கள் சொன்னது சரியில்லை என்கிறார்களே. எனக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. உங்கள் ஆசீர்வாதத்தால் என் பெண்ணும் மாப்பிள்ளையும் சௌக்கியமாக இருக்கிறார்கள். ஆனாலும் நீங்கள் ஏன் அப்படிச் சொன்னீர்கள் என்று தெரியவில்லை" என்றார்.

"நான் பொய்யே சொல்லவில்லை; வாருங்கள். அவர் ஊருக்குப் போய்த் தெரிந்து கொள்ளலாம். இதற்காகப் போனதாகக் காட்டிக் கொள்ளவேண்டாம்" என்றார் புத்திசேகரர்.

இருவரும் விவேகபுரத்தை அடைந்தார்கள். வேறு ஏதோ காரியமாக வந்தவர்கள் அப்படியே பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்ததாக ரகுவீரரிடம் சொன்னார்கள். ரகுவீரர் பிள்ளை கமலநாதனைப் புத்திசேகரர் குபேரவர்மருக்குக் காட்டினார்.

"மற்றப் பிள்ளைகள் எங்கே?" என்று மெதுவாகக் கேட்டார் குபேரவர்மர்.

'வாருங்கள், காட்டுகிறேன். ரத்திலும் சுவரிலும் ஏறிக் திக்கும் பிள்ளை என்று சொன்னேனே, அந்தப் பிள்ளையை இதோ பாருங்கள்'' என்று புத்திசேகரர் காட்டினார்.

அவர் காட்டின பிள்ளை யார் தெரியுமா? ரகுவீரர் வளர்த்துவந்த அணிற்பிள்ளை.

"அதோ, பாம்பென்றால் பிடிக்க ஓடும் பிள்ளை" என்று மற்றொன்றைக் காட்டினார் சேகரர். கீரிப்பிள்ளையைத் தான் அவர் காட்டினார்.

"இதோ நின்ற இடத்தில் நிற்கும் பிள்ளை!" அதுதான் தென்னம்பிள்ளை.

"இங்கே பாருங்கள், அடைத்து வைத்திருக்கும் பிள்ளை!''

கூட்டில் இருந்த கிளிப் பிள்ளையை அவர் காட்டினார். குபேரவர்மர் இதைக் கண்டு ஆச்சரியப் பட்டுப் போனார். "இப்படி என்னை நீங்கள் ஏமாற்றலாமா?'' என்று கேட்டார்.

"நான் சொன்ன வார்த்தைகளில் ஒன்றும் தவறில்லையே! இந்த நான்கு பிள்ளைகளையும் ரகுவீரர் வளர்க்கிறார். அவருடைய வளர்ப்புப் பிள்ளைகளாகிய இவைகளைப்பற்றி நான் சொன்ன சங்கதி அத்தனையும் உண்மைதானே?'' என்று கேட்டார் புத்திசேகரர்.

"இப்படிச் சொல்லி எனக்குப் போக்குக் காட்டுவானேன்?'' என்றார் குபேரவர்மர்.

"உங்கள் பெண்ணுக்கு உங்கள் தங்கை மகனைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள ஆசை. இவருடைய பிள்ளைக்கோ வேறொரு பெண்ணை மணந்துகொள்ள ஆசை. இவற்றையெல்லாம் உங்களுக்குச் சொல்லிக்கொண்டிருப்பானேன் என்றுதான் வளர்ப்புப் பிள்ளைகளைப்பற்றிச் சொன்னேன். தவறாக இருந்தால் மன்னிக்க வேண்டும்.''

"தவறு ஒன்றும் இல்லை. எது எப்படி நடக்க வேண்டுமோ அப்படி நடந்துவிட்டது. உங்களுடைய சாதுரியத்தை நான் பாராட்டுகிறேன்'' என்றார் குபேரவர்மர்.

நம் விரல்கள்

நம்முடைய கைகள் ஆதியில் நிற்பதற்கும் நடப்பதற்கும் உபயோகப்பட்டன. மேஜைமேல் விரல்களை நடப்பது போல் வைத்துப் பார்த்தால் விரல்கள் சமமாக ஊன்றிப் படிவதைக் காணலாம் நடு விரல் சுண்டு விரல், கட்டை விரல் எல்லாம் பின்னால் நிற்கும். மூன்று விரல்களுள்ள மிருகங்களுக்கும் இப்படியேதான் இருக்கின்றன எல்லா விரல்களும் ஒரே நீளமாய் இருந்தால் உபயோகிப்பது மிகவும் சிரமம்.

உதவாத நண்பர்கள்

'சோமசன்மா'

"சபாஷ்! முயல்! இன்று அல்வா வெகு ஜோர்!" என்றது குதிரை.

"டீ ஒண்ணும் கிளாஸ்!" என்றது வெள்ளாடு.

"என்ன இருந்தாலும் இந்த ஐஸ் கிரீமைப் போல் இனிப்பான சாமான் ஒன்றுமே கிடையாது" என்றது குரங்கு.

"தயிர் வடை என்றால் இவ்வளவு ருசியாயிருக்கும் என்று இதுவரையில் எனக்குத் தெரியவே தெரியாதே!" என்று நாக்கை நீட்டி 'ஷொட்டு'க் கொட்டிற்று எருமைக் கன்றுக்குட்டி.

இவ்வளவும் எங்கே நடந்தது என்று கேட்கிறீர்கள்? இவ்வளவும், ஒரு நாள் ஒரு காட்டில் ஒரு முயல் தன்னுடைய நண்பர்களுக்கு 'டீ பார்ட்டி' கொடுத்தபோது நடந்தது. அந்த முயலுக்கு அன்று பிறந்த நாள் கொண்டாட்டம். அதனால் அது தன்னுடைய நண்பர்களுக்கு டீ பார்ட்டி கொடுத்தது.

முயல் டீ பார்ட்டி கொடுப்பதென்றால் அதற்கு அல்வா ஏது, தயிர்வடை எப்படிக் கிடைத்தது என்றெல்லாம் யோசிக்கிறீர்கள் அல்லவா? அதுதான் விசேஷம். நம்முடைய முயல் ஒரு நாள் போய்க்கொண்டிருக்கையில் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்று கிடைத்தது. அதை வைத்துக் கொண்டு அது என்ன செய்யலாம் என்று யோசித்தது. நீங்களாயிருந்தால் என்ன செய்வீர்கள்? ஒரு புஷ்கோட் வாங்கிப் போட்டுக்கொள்வீர்கள்; அல்லது சாவி கொடு

...ல் ஓடும் ரெயில் வண்டி ...ங்கி விளையாடுவீர்கள். ...ஆனால் முயல் எப்போதும் ...துவான பிராணி அல்லவா? அது அப்படி யெல்லாம் நினைக்கவில்லை. தன்னுடைய நண்பர்கள் எல்லாருக்கும் ஒரு விருந்து வைத்தால் என்ன என்று யோசித்தது. அதற்கேற்றாற் போல் மறுநாளே அதற்குப் பிறந்த நாளும் வந்தது. அதனால் அது ...டீ பார்ட்டி வைத்தது. அதற்காக அடுத்த ஊருக்குப் போய் ஒரு ஹோட்டலிலிருந்து அல்வா, தயிர்வடை, மிக்ஸ்சர் முதலிய பட்சணங்களையெல்லாம் வாங்கிக்கொண்டு வந்தது. இப்போது புரிந்ததா, முயலுக்கு எப்படிப் பலகாரங்கள் கிடைத்தன என்பது?

ஆகையினால் மேலே சொன்ன பிரகாரம் குதிரை, வெள்ளாடு, குரங்கு, எருமைக் கன்றுக்குட்டி எல்லாம் ஸ்தோத்திரம் பண்ணினதும் முயலுக்கு ரொம்பப் பெருமையாய் இருந்தது.

"இது என்ன பிரமாதம்! ...ங்களுக்குப் பெரிய சாப்பா...டாய்ப் போடவேண்டும் என்...றிருந்தேன். ஆனால் ஊரெல்...லாம் இப்போது ரேஷனும். அதனால் சாப்பாடு கிடைக்க...வில்லை" என்றது முயல்.

"இந்தமாதிரி அல்வா எப்போதும் கிடைத்தால் என்னுடைய புல்லையும் கொள்ளையுமே மறந்துவிடுவேன்" என்றது குதிரை.

"இந்த டீயைக் குடித்துவிட்டு எத்தனை வருஷமானாலும் இருக்கலாமே" என்றது வெள்ளாடு.

குரங்கு மட்டும் சும்மா இருக்குமா? "இந்த ஐஸ் கிரீமைத் தின்றுவிட்டால் கள்ளையே மறந்துவிடலாம்" என்றது.

"இந்தத் தயிர்வடை—தயிர்வடை" என்று எருமைக் கன்றுக்குட்டி திணறிற்று. ஏனென்றால் அதன் வாய் நிறையத் தயிர்வடை இருந்தால் அதனால் பேச முடியவில்லை.

"ஏய், எருமைக் கன்னுக்குட்டி! விக்கிப் பிராணன் போய்விடப் போகிறது! முழுங்கிவிட்டுப் பேசு!" என்றது குரங்கு. எல்லாம் கொல்லென்று சிரித்தன.

இப்படியாக எல்லாம் வயிறு புடைக்கத் தின்றுவிட்டுக் கும்மாளம் அடித்தன. முயலுக்கு ரொம்ப சந்தோஷம். தன்னைப் போல் அதிருஷ்டசாலி யாருமே இல்லை என்று நினைத்தது. பின் இவ்வளவு நண்பர்கள் ஒருவருக்கு இருந்தால் சந்தோஷமாய் இருக்காதா?

இப்படி இருக்கையில் ஒரு நாள் சாயங்காலம் நம்முடைய முயல் என்ன பண்ணிற்று; வேடிக்கையாக நடந்து போயிற்று. எதற்காக நடந்து போயிற்று என்றால், சும்மா

நடந்தால் உடம்புக்கு வலுவு என்று வாத்தியார் சொல்லி யிருக்கிறுர் அல்லவா? அதனுல் தான் நடந்து போயிற்று.

அது கொஞ்ச தூரம் போய் விட்டுத் திரும்பியிருக்கலாம். ஆனுல் வரப்போவது அதற்கு என்ன தெரியும்? மனசுக் குள்ளாக உற்சாகமாக ஒரு ஹிந்திப் பாட்டைப் பாடிக்கொண்டே ரொம்ப தூரம் போய்விட்டது. திடீ ரென்று அதன் காதில் கொம்பு கள் ஊதும் சப்தம் விழுந்தது. அது நின்று கவனித்தது. இன் னும் தப்பட்டைகள் கொட் டும் சத்தமும் கேட்டது. உடனே அதற்கு விஷயம் புரிந்துவிட்டது. ராஜா வேட்டையாட வருகிருன்.

ராஜா என்றுல் உடனே அவன் வேட்டையாட வேண் டியது அவசியம் இல்லையா? அதைப் போலத்தான் அந்த ஊர் ராஜாவும் வேட்டையாட வந்தான்.

வேட்டையாடுவது என்றுல் தான் உங்களுக்குத் தெரியுமே! அதுதான் வேட்டை நாய்களை விரட்டி, காட்டில் உள்ள மிரு கங்களை யெல்லாம் துரத்தி, கடைசியில் எல்லாவற்றையும் சுட்டுக் கொன்றுவிடுவது. ஆகையினுல் ராஜா வேட்டை யாட வந்துவிட்டான் என்ற தும் நம்முடைய முயலுக்குப் பயம் வந்துவிட்டது.

அந்தச் சமயத்தில் அதற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அங்கும் இங்கு மாகச் செடிகளுக்கு மறைவில் ஓடிற்று. எங்கே ஓடினுலும் வேட்டை நாய்கள் மோப்பம் பிடித்துக்கொண்டே விடாமல் துரத்திப் பிடித்துவிடும் என்று அதற்குத் தெரியும். இருந் தாலும், என்ன செய்வது என்று புரியாமல் அது ஓடிற்று.

அப்போதுதான் அதற்குத் தன்னுடைய நண்பன் குதிரை யின் ஞாபகம் வந்தது. குதிரை யிடம் போய்விட்டால் அது தன்னை முதுகின்மேல் ஏற்றிக் கொண்டு ஓடிவிடும். குதிரை யின் ஓட்டத்தை நாய்களால் பிடிக்க முடியாது அல்லவா? அப்புறம் எங்கேயாவது போய்த் தப்பித்துக்கொள்ள லாம் அல்லவா?

ஆகையினுல் அது நேராகக் குதிரையின் வீட்டுக்கு ஓடிக் கதவை இடித்தது. குதிரை வெளியில் வந்ததும் அதனிடம் விஷயத்தைச் சொல்லிற்று. "எப்படியாவது என்னைக் காப்பாற்றி விடு" என்று பரி தாபமாகச் சொல்லிற்று. இதைக் கேட்ட குதிரை தலை யைச் சொறிந்தது. பிறகு சொல்லும்:

"அப்பா, முயல்! உன்னைப் போல ஒரு சிநேகிதனுக்காக உயிரைக்கூடக் கொடுக்கலாம். ஆனுல் இந்தச் சமயம் பார்த்து வந்தாயே என்றுதான் வருத்த மாயிருக்கிறது. என்னுடைய மனைவிக்கு டைபாய்டு ஜுரம்

...நூற்றைந்து டிகிரி அடிக்கிறது. டாக்டர் பக்கத்திலேயே இருந்து மருந்தைக் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். என்ன பண்ணுவது? இல்லாவிட்டால் இது ஒரு பெரிய சமாசாரம் இல்லே. எத்தனை ஆயிரம் நாய்கள் வந்தாலும் உன்னைத் தூக்கிக்கொண்டு ஏரோப்ளேன் வேகத்தில் பறந்துவிடுவேன்!"

இப்படியாகக் குதிரை சொன்னதும் முயலுக்கு அது சொல்வது நியாயந்தான் என்று தோன்றியது. பின் ...லேவிக்கு டைபாய்டு அடித்தால் யார்தான் என்ன செய்யமுடியும்?

"இந்த ஆட்டுப்பயலே வேண்டுமானால் பாரேன். அவன் பிரம்மசாரி. குடும்பத் தொல்லே ஒன்றும் கிடையாது. கட்டாயம் உதவி செய்வான்" என்றது குதிரை கடைசியில்.

முயல் நேராக ஆட்டினிடம் போயிற்று. அதுவும் கையை விரித்து விட்டது. "இதோ பாரு! நீ கேக்கறது நியாயம். ஆனால் இந்த வம்புக்கு எல்லாம் நான் வரமாட்டேன். வேட்டைநாய்களுக்கு முன்னால் உன்னை நான் கூட்டிக்கொண்டு போனால் அதுகள் விரோதம் வரும். அப்புறம் நான் அகப்பட்டுக்கொண்டு விழிக்கவேண்டும். வேறு எது வேணுமானாலும் செய்கிறேன். இந்த உதவி மட்டும் என்னால் முடியாது!" என்றது ஆடு.

முயல் அடுத்தபடியாகக் குரங்கினிடம் போயிற்று. குரங்கு சொன்ன பதில் வேறு விதமாயிருந்தது. "நீ போய் அந்த நாய்களுக்கு எதிரில் சண்டை போட்டுக்கொண்டிரு. நான் இதோ குளித்துவிட்டு வந்துவிடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே மரக் கிளையைப் பிடித்துக்கொண்டு தாவிப் போயிற்று.

அடுத்தபடியாக எருமைக் கன்றுக்குட்டி. 'அதுமாத்திரம் என்ன ஒத்தாசை செய்து விடப்போகிறது?' என்று நினைத்துக்கொண்டு அதைப் போய் முயல் கேட்கவில்லை. மேலும் எருமைக் கன்றுக் குட்டிக்கு மூளை ஏது? அப்ப டித்தான் முயலும் நினைத்தது.

அப்போது 'ஙொய்!' என்று ஒரு சத்தம் கேட்டது. முயல் திரும்பிப் பார்த்தது. எருமைக் கன்றுக்குட்டிதான் ஓடிவந்தது.

முயலைப் பார்த்ததும், "டேய்! உனக்கு ஏதோ கஷ்டம் என்று கேள்விப் பட்டேன். அதனால்தான் ஓடி வந்தேன்" என்று சொல் விற்று.

முயலுக்கு எருமைக் கன்றுக்குட்டியால் ஒன்றும் செய்ய முடியாது என்ற எண்ணம். அத னால் வாயைத் திறக் காமல் 'ஊம்' என்று தலையை ஆட்டிக் கொண்டு உட்கார்ந் திருந்தது. அதுவும் இல்லாமல் தாரை, தப்பட்டை முதலிய வைகளின் சத்தமும் வரவரக் கிட்டத்தில் கேட்டது. இன்னும் ஒரு நிமிஷம். அதன் பிறகு ராஜாவின் வேட்டை நாய்கள் வந்துவிடும். அப்படியே முயலின் குரல்வளை யைப் பிடித்துக்கொண்டு போய் ராஜாவிடம் நிறுத்தி விடும்.

அப்போது எருமைக் கன்றுக்குட்டி பக்கத்தில் வந்து அவசரம் அவசரமாகச் சொல் லும்: "டேய்! சும்மா உம்மணா மூஞ்சி மாதிரி உட்கார்ந் திராதே. என் முதுகின் மேல் ஏறிக்கொள். நான் உன்னைத் தூக்கிக்கொண்டு இந்தக் குட்டைக்குள் முழுகிவிடு கிறேன். ராஜாவின் வேட்டை நாய்கள் வந்ததும் தண்ணீருக் குள் அமுங்கிவிடுகிறேன். நீயும் இரண்டு நிமிஷம் மூச்சைக் கட்டிக்கொண்டு இரு. உடனே நாய்கள் நம்மைத் தாண்டிப் போய்விடும். பிறகு நமக்குப் பயமில்லை!"

இதைக் கேட்ட முயலுக்குச் சந்தோஷமா யிருந்தது. அப்

படியே எருமைக் கன்றுக் குட்டியின் மேல் ஏறிக்கொண்டது. அதுவும் குளத்துக்குள் இறங்கி நின்றது. ராஜா பரிவாரங்களுடன் வந்தான். அவனுடைய வேட்டைநாய்கள் சுற்றிலும் மோப்பம் பிடித்துப் பார்த்தன. எருமைக் கன்றுக்குட்டி சடக்கென்று தண்ணீருக்குள் அமுங்கிற்று. முயல் மூக்கைப் பிடித்துக் கொண்டு முழுகிற்று. அவ்வளவுதான், ஒரு நிமிஷம். நாய்கள் போய்விட்டன. ராஜாவின் பரிவாரங்களும் மறைந்துவிட்டன.

"பிழைத்தேன்!" என்று முயல் தலையைத் தூக்கிற்று. அதன் பிறகு அது, "உன்னைப் போல் புத்திசாலி உலகத்திலேயே இல்லை" என்று எருமைக் கன்றுக்குட்டியின் கையைப் பிடித்து வலிக்கிற மட்டும் குலுக்கிற்று.

ஆகையினால் பிள்ளைகளே! நமக்கு அநேகம் பேர் சிநேகிதர்களாயிருந்தாலும் யாராவது ஒரு சிலர்தான் உண்மையான நண்பர்களாயிருப்பார்கள் என்பதும், நாம் யாரை முட்டாள் என்று நினைக்கிறோமோ அவர்களே சில சமயத்தில் புத்திசாலிகளாய் இருப்பார்கள் என்பதும் இதனால் தெரிகிறது அல்லவா?

தண்ணீரில் தெரியும் பொருள்

அப்போது கோடைக்காலம்; சூரியன் உச்சியில் இருந்தது. குளத்தில் குளிக்கப் போனோம். குளம் நிர்மலமாக இருந்தது. அடியில் மணல்தரைகூடப் பளிச்சென்று தெரிந்தது. படி வழியாக இறங்கிக் கீழே போகப் போகக் கீழ்மட்டத்தில் இருக்கும் படி கிட்ட இருப்பது போல் தெரிந்தது. அங்கே அவ்வளவு ஆழம் இராது என்று எங்களுக்குத் தோன்றிற்று. கடைசியில் தண்ணீரில் இடுப்பு மட்டத்துக்கு வந்ததும் அடியில் சற்றுத் தள்ளி ஒரு கிளிஞ்சில் இருப்பதைப் பார்த்தோம். அதைக் கையாலேயே சுலபமாக எடுத்துவிடலாம் என்று தோன்றிற்று. ஆனால் கையை விட விடத் தரை எட்டவேயில்லை. தலைகூட முழுகிவிடும்போல் இருந்தது. நினைத்ததைவிட ரொம்ப ஆழமாய்ப் போய்க்கொண்டிருந்தது. இது ஏன்? எங்கள் கண்ணே எங்களை ஏமாற்றியதா?

காரணம்: மணல் தரையிலிருந்தும் கிளிஞ்சிலிலிருந்தும் வெளிப்படும் ஒளிக்கிரணம் தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது நேராக வந்து கண்ணில் விழுவதில்லை; வளைந்து வந்து விழுகிறது இதனால்தான் கிளிஞ்சிலும் மணலும் ஆழத்தில் இருந்தாலும் வெகு சமீபத்தில் இருப்பதுபோல் தெரிகின்றன.

சௌபாக்கிய சுந்தரி

'அலகா'

ராஜா என்றால் அவனுக்கு ஒரு கவலையும் கிடையாது, ஒரு தொந்தரவும் கிடையாது என்றுதான் சகஜமாக உலகத்தில் எல்லாரும் நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில் அதுதான் இல்லை. நேர் மாறுதல். மனிதனுடைய அந்தஸ்து உயர உயர, தொந்தரவுகள் அதிகரித்துக்கொண்டு தான் போகும். கஞ்சிக்கும் கதியற்ற ஏழையைவிட அவன் கவலையும் கஷ்டமும் அநுபவிப்பான். செல்வம் இருந்துவிட்டால் மட்டும் ஒருவனுக்குச் சந்தோஷம் ஏற்பட்டு விடுவதில்லை.

அப்படித்தான் ஆயிற்று மகேசுவர சக்கரவர்த்தியின் பிழைப்பும். வயசு முதிர்ந்த அந்தச் சக்கரவர்த்தி மனமுடைந்து கவலையால் உருகிக் கொண்டிருந்தார். அவருடைய கீர்த்தி உலகமெல்லாம் ஓங்கியிருந்தது. அவருடைய அரண்மனைப் பொக்கிஷம் செல்வத்தால் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. நீதி செலுத்தும் முறையையும் வாழ்த்தாதவர்கள் இல்லை. எல்லாம் இருந்தும் அவர் மனமுடைந்து போய் உட்கார்ந்திருப்பானேன்? அரண்மனையில் உள்ளவர்களுக்கே இது ஆச்சரியமாய்த் தான் இருந்தது.

மகேசுவர சக்கரவர்த்தி அந்தப்புரத்துக்குப் போனார். பட்டத்து மகிஷியைப் பார்த்து, "எனக்கு என்னவோ இந்தப் பெண் குழந்தை பிறந்ததைக் கேட்டு அச்சமாய் இருக்கிறது. பதின்மூன்றாவது எண் அவ்வளவுகெட்ட சூசகம். ஏற்கனவே பன்னிரண்டு குழந்தைகள் இருக்கிறார்களே. இது பிறக்காமலே இருந்திருக்கப்படாதா? ஏதோ துர்ச்சம்பவம் நிகழத் தான் போகிறது!" என்று வருந்தினார்.

என்ன வேளையில் இப்படிச் சொன்னாரோ, அதற்குத் தகுந்தாற்போலவே அந்தக் குழந்தை பிறந்தது முதல் நாட்டில் எல்லாம் விபரீதமாகவே மாறி வந்தன. பூச்சிகள் தோன்றிப் பயிர்களை அழித்தன. பிணி வந்து மக்களை வாட்டியது. பஞ்சம் பரவிக் குடிகளை வருத்தியது. பத்தே வருஷங்களில் நாடு க்ஷீணமடைந்து அழியும் நிலையை அடைந்துவிட்டது.

எந்த ராஜாதான் குடிஜனங்களின் துர்ப்பாக்கியத்தைக் கேட்டு மனமுடையாமல் இருப்பான்? மகேசுவரருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவர் மனசுக்குள்ளேயே வெம்பி, வதங்கி, தவித்துக்கொண்டிருந்தார்.

கடைசியாக அவருக்கு ஒரு யோசனை உதித்தது. அதன்படி நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வைத்தியர்களையும்

புத்திமான்களையும் தலைநகரில் கூட்டி ஓர் ஆலோசனை சபை நடத்தினார்.

ஒருவருக்காவது காரணம் புலப்படவில்லை. கடைசியாக ஒரு கிழவன் எழுந்தான். "மகாராஜாவே, என்னை மன்னித்து அருளவேண்டும். நம் தேசத்தைப் பீடித்திருக்கும் துர்ப்பாக்கியங்களுக்கு உங்கள் பதின்மூன்றாவது குமாரிதான் காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது. வேண்டுமானால் இரவில் சோதனை செய்து பாருங்கள். அவள் மற்றக் குழந்தைகளைப்போல மஞ்சத்தில் படுத்துச் சுக நித்திரை செய்ய மாட்டாள். கன்னத்தில் கைவைத்தபடியே தூங்கிக் கொண்டிருப்பாள். அது உண்மையாக இருந்தால் அவளை இந்த நாட்டிலிருந்து வெளியேற்றினால்தான் சுபிட்சம் ஏற்படும்" என்றான்.

அன்று இரவு, நடு நிசியில் மகேசுவர சக்கரவர்த்தி அடிமேல் அடிவைத்துப் பூனை போலக் குமாரியின் அந்தப்புரத்துக்குள் நுழைந்தார். அவர் மனம் துணுக்குற்றது. ராஜகுமாரி அந்தக் கிழவன் வர்ணித்தபடியே தூங்கி வழிந்தாள். மெல்ல வந்த வழியே திரும்பி வந்து விசனக் கடலில் ஆழ்ந்தார்.

'அவள் என்ன இருந்தாலும் என் குமாரி. அவளை விட்டு நான் எப்படிப் பிரிந்திருப்பேன்? அவளை இந்த நாட்டைவிட்டு அனுப்பாவிட்டால் ராஜ்யமே நிர்மூலமாகிவிடும்போல் இருக்கிறதே. என் குமாரி ஒருத்திக்காகப் பல கோடி மக்கள் துன்பத்தில் உழலுவதா?' என்று அவர் மனம் பாசத்துக்கும் கடமைக்கும் நடுவில் போராடியது.

'பொழுது விடிந்ததும் அவளுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்து அவளை அனுப்பி விடத்தான் போகிறேன்' என்று கடைசியாகத் தீர்மானித்துக் கொண்டார்.

பொழுது விடிந்தது. தம் தீர்மானத்தை எல்லாரிடமும் அறிவித்தார். அரசியும் குமாரியும் அந்தப்புரத்திலுள்ள அத்தனை

பேரும் இதைக் கேட்டுத் திடுக்கிட்டனர்.

திடுக்கிட்டு என்ன செய்வது? வருந்தி அழுதுதான் என்ன செய்வது? அரண்மனைத் தாதி ஒருத்தியைத் துணைக்கு அமர்த்தி, பொன்னும் பொருளுமாகக் கட்டிக் கொடுத்து ராஜகுமாரியை எல்லாருமாக வழியனுப்பினர்கள். அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக ராஜகுமாரி சுந்தரி நாட்டை விட்டுப் புறப்பட்ட காட்சி நகர மாந்தர்களுக்கு வேதனையாக இருந்தது.

"அடி பொன்னி, என் தலைவிதி, நான்தான் நாட்டையும் நகரத்தையும் விட்டுப் போக வேண்டியிருக்கிறது. நீயும் எதற்காகவடி இப்படிக் கஷ்டப்படவேண்டும்? நீ திரும்பிப் போய்விடு. நான் தனியாகவே போய்க் கொள்கிறேன்" என்ருள் ராஜகுமாரி.

தாதிக்கு அவளை விட்டுச் செல்ல மனமில்லை. நாட்டின் எல்லையைக் கடந்ததும் தாதி பொன்னியின் ஆடைகளை ராஜகுமாரி வாங்கி அணிந்து, தன் ஆடைகளையும் பொன்னையும் கொடுத்து அவளைத் திருப்பி அனுப்பினுள்.

ராஜகுமாரி அதன் பிறகு தனியே நடந்து செல்லலானுள். சில நாட்களில் ஒரு பெரிய நகரத்தை அடைந்தாள். அழகான மாடமாளிகைகளும், ஒய்யாரமான ராஜ வீதிகளும், சிங்காரச் சோலைகளும் நிறைந்த அந்தப் பட்டணத்தின் பெருமையைக் கண்டு வியந்தாள்.

ஏதாவது ஒரு நல்ல வீட்டில் வேலைக்கு அமர நிச்சயித்து ஓரிடத்துக்குப் போனுள். அந்த வீட்டுக்காரன், "அடேடே, கொஞ்ச நாழிகைக்கு முன்பு வந்திருக்கப்படாதா? நீ வருவாய் என்று தெரிந்திருந்தால் நான் சற்று முன் வந்த பெண்ணை நியமித்திருக்க மாட்டேனே" என்று வருத்தப்பட்டான்.

ஆனல் சுந்தரி வருத்தப்படவில்லை. கையிலோ பணம் ரொம்பக் குறைந்துவிட்டது. இருந்தாலும் தைரியத்தைக் கை விடாமல் வேறோர் இடத்தில் விசாரித்தாள். அந்த வீட்டுக்காரன் ரொம்ப நல்லவன். "அம்மா, அதோ தெரியுதே, ஒரு பெரிய வீடு! அங்கே போ. உனக்கு நிச்சயம் நல்ல வேலையாகக் கிடைக்கும். வீணுகக் கண்ட இடத்துக்குப் போய் அலையாதே" என்ருன்.

அப்பப்பா! எத்தனை பெரிய மாளிகை அது! ஸ்வர்ணமும், வெள்ளியும், வைரமும் வைடூரியமுமாய் நிறைந்த ராஜபோகமான மாடங்களும் மண்டபங்களும் நவரத்தினம் வைத்திழைத்த சித்திர கூடங்களும் பார்க்கப் பார்க்கப் பிரமிப்பைக் கொடுத்தன. தரையில் கால் வைத்து நடக்க அந்த ராஜகுமாரிக்கே கூச்சமாய் இருந்தது. அவளுடைய தந்தையின் அரண்மனையில் செல்வம் குவிந்து கிடந்ததை அவள் பார்த்திருக்கிருள். அதெல்லாம் இந்த மாளிகையில் இறைந்து கிடப்பதற்கு முன் எம்மாத்திரம்?

அவள் போகப் போக அங்கே மனித வாசமே இருப்

பதாக முதலில் தோன்றவில்லை. கடைசியாகத் திரும்பப்போகிற சமயத்தில், "பெண்ணே, யாரம்மா நீ?" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள்.

அப்படிக் கூப்பிட்டது அந்த வீட்டு எஜமானிதான். அவளைப் பார்த்த ராஜகுமாரிக்குக் குலை நடுக்கம் எடுத்துவிட்டது. அடேயப்பா, என்ன கோரம்!

விகாரமென்றால் இப்படி ஒரு விகாரத்தை யாருமே பார்த்திருக்க முடியாது. கறுப்பு, இருட்டை விடக் கறுப்பு! பருமன், சிற்றானைக் குட்டியை விடப் பருமன்! ஒரே பயங்கரமாய் இருந்தது அவள் சொரூபம். ஆனால், அவளுடைய அந்தப் பார்வை மட்டும் கருணையே வடிவாய் இருந்தது. அது ஒன்றினால்தான் ராஜகுமாரி சுந்தரி மூர்ச்சை யடையாமல் நின்றாள்.

"யார் அம்மா, நீ? - அடடா, என்ன இனிமையான குரல்!" ஆனால் அவள் உருவமோ இப்படி மகா கேவலமாய் இருக்கிறதே!

அந்த வீட்டு எஜமானி ராஜகுமாரியைப் பார்த்து, "ஆமாம்; நான் கோரமாகத்தான் இருக்கிறேன். ஆனால் என்னைப் போல அதிருஷ்டசாலி யார் இருக்கிறார்கள்? என் அதிருஷ்ட தேவதையின் அழகைப் போல இந்த உலகில் யாருக்குமே இல்லை. ஆனால் மகா ரூபவதியான உன் அதிருஷ்ட தேவதை எப்படி இருக்கும் தெரியுமா? அந்தக் கோரத்தைச் சிந்தித்துப் பார்க்கவே சகிக்காது" என்றாள்.

ராஜகுமாரி பணிந்து, "என்னை மன்னித்துவிடுங்கள்; நான் தெரியாத்தனமாய் உங்களைக் கேவலமாக எண்ணிவிட்டேன்" என்று சொல்லி, தன்னுடைய விவரங்களை யெல்லாம் ஒன்று விடாமல் கூறினாள்.

அந்தக் கறுப்பாயி - அது தான் அவள் பெயர் - அவளுக்கு ஆறுதல் கூறி அன்போடு தடவிக் கொடுத்தாள். பிறகு, "குழந்தாய், அந்த அறையில் ஒரு பெரிய மஞ்சம் இருக்கிறது. அதன் அடியில் இன்று இரவு ஒளிந்து கொள். அறுசுவை உண்டியைத் தயாரித்து அந்த அறையில் வைத்துவிட்டுப் பார்த்துக்கொண்டே இரு. என்ன நடக்கிறதோ அதைக் காலையில் என்னிடம் வந்து சொல்" என்றாள்.

நடுச் சாமம் இருக்கும். ராஜகுமாரி விழித்து இருந்து கவனித்துக்கொண்டிருந்தாள். கதவு மெல்லத் திறந்துகொண்டது. செளந்தரியமே உருக்கொண்ட அழகுத் தேவன் ஒருவன் கம்பீரத் தோற்றத்துடன் உள்ளே நுழைந்தான். அறுசுவை உண்டியைச் சிறிது எடுத்து உண்டான். போய் விட்டான். ராஜகுமாரிக்கு ஒரே வியப்பாக இருந்தது.

காலையில் கறுப்பாயி, "இரவு பார்த்தாயே? அவன்தான் என்னுடைய அதிருஷ்ட தேவதை!" என்றாள்.

"பார்த்தேன். ஆனால் என்னுடைய அதிருஷ்ட தேவதையையும் நான் பார்க்கவேண்டுமே!"

"அதிருஷ்ட தேவதையா?

துரதிருஷ்டப் பீடை என்று சொல்லு! இன்றைக்கும் நேற்று மாதிரியே எல்லாம் செய். ஆனால் நேற்றுத் தயாரித்த உண்டியைப் போல மூன்று மடங்கு இருக்கட்டும். உன் ஆள் பெரிய சாப்பாட்டுக் குண்டோதரன்! ஜாக்கிரதை."

ராஜகுமாரி எல்லாவற்றையும் தயார் செய்து முடித்ததும் கறுப்பாயி அவளைக் கூப்பிட்டு, "கண்ணே, இதோ பார், அந்தப் பீடை பிடித்த குண்டோதரன் நீ வைத்திருக்கும் சாப்பாட்டைப் பாதி சாப்பிடும்போதே மலைபோலப் படுத்துக் குறட்டை விட ஆரம்பித்துவிடுவான். அவன் பையில் சிவப்பு ரத்தினம் ஒன்று இருக்கும். மெதுவாக அதை எடுத்துக்கொண்டு ஓடியே போய் விடு. அவன் எழுந்து கதறினாலும் சரி, முட்டிக்கொண்டாலும் சரி, திரும்பியே பார்க்காதே" என்று எச்சரிக்கை செய்தாள்.

முதல் நாளைப் போலவே அன்றும் நடுச் சாமம் இருக்கும். பெரிய சத்தம் ஒன்று கேட்டது. மஞ்சத்தின் அடியில் ஒளிந்துகொண்டிருந்த ராஜகுமாரி திடுக்கிட்டாள். கதவு படேரென்று திறந்துகொண்டது. உள்ளே பூதாகாரமான ஒரு தடியன் 'தடாபுடா' என்று நுழைந்து வந்தான். மூன்று அடுக்குச் சாப்பாட்டையும் காட்டுமிராண்டித்தனமாக வாயில் அள்ளித் திணித்துக் கொண்டான். சாப்பிட்டு முடித்தானோ இல்லையோ பெரிய கொட்டாவியாக வந்தது. அப்படியே தரையில் நெடுஞ்சாண் கிடையாகச் சாய்ந்து குறட்டைவிட ஆரம்பித்தான்.

ராஜகுமாரி முதலில் சிறிது தயங்கினாள். இருந்தாலும் கறுப்பாயி சொன்னதைச் செய்யாமல் இருக்கலாமா? மெதுவாக வெளியே வந்து அந்தச் சிவப்பு ரத்தினத்தை எடுத்தாள். அதைக் கையில் பற்றிக்கொண்டு எடுத்தாள் ஓட்டம். உடனேயே அந்தக் குண்டோதரனுக்குத் தூக்கம் கலைந்தது. "அடி பெண்ணே, வ பெண்ணே!" என்று பலங்கொண்டமட்டும் கதறினான். ராஜகுமாரி திரும்பிப் பார்த்தால்தானே?

"ராஜகுமாரியே, இதோ என்னைத் திரும்பிப் பாரேன்! உனக்கு என்ன வேண்டுமானாலும் தருகிறேன். எது வேண்டுமானாலும் தருகிறேன்" என்று வீரிட்டான்.

ஒன்றும் அவளிடம் பிரயோஜனப்படவில்லை. கடைசியில் கதறிக் கதறியே அவன் கீழே சுருண்டு விழுந்து பிராணனை விட்டுவிட்டான்.

மறுநாள் காலையில்தான் ராஜகுமாரி கறுப்பாயியிடம் திரும்பி வந்தாள். வெளியிலே முரசு ஒலி கேட்டது.

"குழந்தாய்! இந்தத் தேசத்து ராஜகுமாரனுடைய முரசு ஒலி கேட்கிறது. மாடத்தில் போய் நின்று அதைக் கேட்டு வா!" என்றாள்.

"டம்......டம்......டம டம... டம்...டம்!

"ராஜகுமாரனிடம் சிவப்பு ரத்தினம் ஒன்று இருக்கிறது. அதற்கு ஜோடியாக இன்னொன்று கொண்டு வருபவர்களுக்கு ஏராளமான வெகுமானம் வழங்கப்படும். டம் டம்...டம டம...டம் டம்."

ராஜகுமாரி இதைக் கேட்டு வந்து சொன்னதும், "இதைத் தான் ராஜகுமாரன் விரும்பப் போகிறான். சிறிதும் தாமதிக்காமல் அதை எடுத்துக்கொண்டு போ! எவ்வளவு பணம் வேண்டும் என்று கேட்டால், அதன் நிறையத்தனை வேண்டும் என்று கேள்!" என்று சொல்லிக் கொடுத்தாள் கறுப்பாயி.

ராஜகுமாரி சிவப்பு ரத்தினத்தை எடுத்துக்கொண்டு ராஜக்கிருகத்தை அடைந்தாள். என்ன ஆச்சரியம்! இவளுடைய ரத்தினந்தான் சரியாகப் பொருந்தியிருந்தது.

ராஜகுமாரன் சந்தோஷத்தினால் உள்ளம் பூரித்தான். "பெண்ணே, உனக்கு எவ்வளவு தொகை வேண்டுமோ, கேள் தாராளமாக!" என்றான்.

"இளவரசே! எனக்கு அப்படி ஒன்றும் பேராசை இல்லை. இந்த ரத்தினத்தின் நிறையுள்ள பொருள் கொடுத்தால் போதும்" என்றாள்.

அவன் சிரித்துக்கொண்டே, "அட பைத்தியமே! இது எவ்வளவு எடை இருக்கப்போகிறது? எனக்கென்ன, உன் விருப்பப்படியே வாங்கிக்கொள்" என்றான்.

ஆனால் என்ன நடந்தது? ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக எதை வைத்தாலும் அந்த ரத்தினத்தின் தட்டு மேலே கிளம்பவேயில்லை. இளவரசன் தன்னுடைய அசட்டுத்தனத்தைத்தான் எண்ணி வெட்கினான். "சரி; அரண்மனைப் பொக்கிஷத்தையே கொண்டு வந்து வை!" என்று கட்டளையிட்டான்.

ரத்தினத்தின் எடைதான் அப்படியும் அதிகமாய் இருந்தது.

"சே சே! இது என்னவோ பெரிய மாய வித்தை!" என்று கத்தினான் ஒரு சேவகன்.

"இனிமேல் அரண்மனையிலிருந்து எதை எடுத்து வைப்பது?" என்றான் இன்னொரு சேவகன்.

"இளவரசர்தான் உட்கார வேண்டும்!" என்று அதற்குப் பரிகாசமாகப் பதில் சொன்னான் முதல் சேவகன்.

"அதையுந்தான் செய்து பார்த்துவிடுகிறேனே" என்று இளவரசன் திடீரென்று தராசுத் தட்டில் ஏறி அமர்ந்துகொண்டான்.

இப்பொழுது நடந்ததுதான் எல்லாவற்றையும்விட அதிசயமாய் இருந்தது.

சிவப்பு ரத்தினம் இ[illegible] தட்டு சமநிலையில் [illegible] நின்றது.

"இளவரசரையே தன்[illegible] அழைத்துப் போய்விடுவ[illegible] போலிருக்கிறதே" என்[illegible] தராசை நிறுத்தவன்.

"அதில் என்ன தவ[illegible] நான் இனி அவளுடையவ[illegible]தான். எது நடக்க வேண்டுமே[illegible] அதுதான் நடந்திருக்கிற[illegible] அதுதான் சரி" என்ற[illegible] இளவரசன்.

ராஜகுமாரியின் சௌந்தரியம் என்ன, சாமானியமானதா? அவளைப் பார்த்த பிறகு வேண்டாம் என்று தட்டிக் கழிக்க இளவரசனுக்குப் பைத்தியமா என்ன?

ராஜகுமாரியின் நாணங் கலந்த புன்னகையைப் பார்த்து, "உன் பெயர்-?" என்று மரியாதையாகக் கேட்டான் இளவரசன்.

"சுந்தரி."

"ஓகோ கோ......வெறு[illegible] சுந்தரிதானா? சௌபாக்கி[illegible] சுந்தரி என்றுதான் நான் கூப்பிடுவேன். சரிதானே?"

"தாராளமாகக் கூப்பிட[illegible]லாம்!" என்று பின்னாலிருந்து கறுப்பாயியின் குரல் வந்தது.

ராஜகுமாரி நாணித் த[illegible] குனிந்தாள்.

பிறகு மகேசுவர சக்க[illegible]வர்த்தியும் அவளுடைய தாயு[illegible] சகோதரர்களும் வராமல[illegible] அந்த அதியற்புதக் கல்யாணப் நடந்திருக்கும்!

அடடா, என்ன சாப்பாடு என்ன சம்பிரமம்! அடடடடா

ஒட்டைச்சிவிங்கி

தேவையானவை: ஒரு நூல் கண்டு; ஒரு தகரக் குழாய்; சுருள் அட்டை, வர்ணக் காகிதம் கொஞ்சம் கம்பளி நூல், பசை, மெல்லிய குச்சிகள் 4, கறுப்பு மை.

படத்தில் காட்டியிருப்பது போல நூல் கண்டை மேல் புறத்தில் V மாதிரி வெட்டிக்கொள்ள வேண்டும். நீண்ட தகரக் குழாயை நீண்ட கழுத்தாகப் பொருத்தவேண்டும். பிறகு தலைக்கு அட்டையைக் கத்தரித்துச் செருகவேண்டும். நூல் கண்டின் அடிப்பாகத்தில் காலைப் பொருத்தி வைக்க ஆணியால் குடைந்து நான்கு குச்சிகளைச் செருகி நிறுத்திவிடலாம். இப்போது நல்ல வெள்ளைக் காகிதத்தால் மேல்புறம் பூராவும் ஒட்டிவிடவேண்டும். பிறகு கண், காது, மூக்கு, வாய் இவற்றுக்கு வர்ணக் காகிதங்களை உபயோகித்தால் நன்ருய் இருக்கும். உடம்புக்குப் படத்திலிருப்பதுபோலக் கறுப்பு மையைப் பூசிவிடலாம். பின்புறம் கம்பளி நூலையும் வால் மாதிரி பொருத்திவிட்டால் அசல் ஒட்டைச்சிவிங்கிதான்.

ஸர் சி. பி. ராமஸ்வாமி ஐயர்

கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள்

பாரத நாட்டில் உள்ளவர்களுக்கும், வெளிநாட்டில் இருப்பவர்களுக்குங்கூட சி. பி. என்ருல் ஒரே ஒருவருடைய நினைவுதான் வரும். அவர்தான் சசிவோத்தமர், சி. பி. ராமஸ்வாமி ஐயர். முன்பு இந்தியா மந்திரியாக இருந்த மாண்டேகு, "சி. பி. இந்தியாவிலுள்ள அறிவாளிகளுக்குள் மிகச் சிறந்த அறிவாளி" என்று கூறியிருக்கிருர். பிரிட்டிஷ் பிரதம மந்திரி அட்லீ, சில மாதங்களுக்குமுன், "அறிவிலும் ஆட்சித் திறமையிலும் ஸி. பி. க்கு இணை யாருமே இல்லை" என்று கூறினுராம்.

சி. பி. ராமஸ்வாமி ஐயருடைய தகப்பனுர் பெயர் சி. ஆர். பட்டாபிராமையர். சென்னையில் அவர் பிரபல வக்கீலாக இருந்தார். ஸிடி சிவில் ஜட்ஜாகவும் இருந்தார். அவருக்கு ஆங்கிலக் கவிதைகளில் மிகுந்த விருப்பம். சி. ஆர். பட்டாபிராமையருடைய தந்தை ராமஸ்வாமி ஐயர் வெகு திறமையுள்ளவர். அவர் தேகக் கட்டும் தைரியமும் உள்ளவர். ஒரு சமயம் கும்பகோணத்தில் அவருடைய வீட்டில் களவு நடந்தது. கள்வர்கள் கொள்ளையிட்ட சாமான்களை எடுத்துச் செல்லும்பொழுது, அவர் ஒருவராகவே அவர்களை எதிர்த்துப் போராடினுர்.

அச்சமயம் கள்வர் தலைவனான அணைக்குடி அருணாசலம் என்பவன், அவருடைய தலையில் பலமாகத் தாக்கினான். அவருக்குக் கழுத்தின் பின்புறத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. அவர் உடனே கீழே விழுந்து மூச்சை அடக்கி, மூர்ச்சை அடைந்தவர் போல் பாசாங்கு செய்து அசையாமல் கிடந்தார். அதைக் கண்ட கள்வர்கள் அவருக்கு மூச்சு நின்றுவிட்டதாகக் கருதி, மேலும் அடித்துத் துன்புறுத்தாமல் போய்விட்டார்கள்.

பிறகு அவர் வெகு தைரியத்துடன் துப்பு விசாரித்து, அந்தக் கள்ளக் கூட்டத்தினரைக் கைது செய்து, கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கினார்.

1879-ஆம் வருஷம் நவம்பர் மாதம் சி. பி. ராமஸ்வாமி ஐயர் பிறந்தார். சி. பி. இளமைப் பருவத்தில் மிக்க அழகுடன் விளங்குவார். அவருடைய சிவந்த மேனியும், சிரித்த முகமும், சுறுசுறுப்பான குணமும், சோம்பலற்ற உழைப்பும் எல்லாருடைய உள்ளத்தையும் கவர்ந்தன. அவருடைய தாய் சீதாலக்ஷ்மி அம்மாள், சாந்தமான சுபாவமுள்ளவள். கண்ணனிடம் பக்தி கொண்டவள். வேதாந்தப்பற்று உடையவள். தாயினுடைய அந்தப் பக்தி உணர்ச்சி மகனிடத்தில் நிறைந்து விளங்குகிறது.

சி. ஆர். பட்டாபிராமையர் தம் குமாரருக்கு ஆங்கிலத்திலும் வடமொழியிலும் சிறந்த தேர்ச்சி ஏற்பட வேண்டுமென்று பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். புத்திசாலியான மகன் வெகு சீக்கிரமே வெளிநாட்டு மொழிகளிலும் (பிரெஞ்சு, ஆங்கிலம் இரண்டிலும்) உள்நாட்டு மொழிகளிலும் சிறந்த தேர்ச்சி பெற்று விளங்கியதைக் கண்டு மகிழ்ந்தார்.

ஒரு நாள் என் தந்தையும், சி. ஆர். பட்டாபிராமையரும், சிறுவர் சி. பி. யும் ஒரு குதிரை வண்டியில் போய்க்கொண்டிருந்தார்களாம். அப்பொழுது குதிரை முரட்டுத்தனம் செய்து பின்னோக்கிச் செல்லத் தொடங்கியதாம். அதைக் கண்ட சிறுவர் சி. பி., "Why does the horse rear?" என்று கேட்டாராம். அதைப்பற்றி என்னிடம் என் தந்தை கூறும் போது, "சாதாரணமாக என்னைப்போன்ற படித்த பெரியவர்கள்கூட, 'Why does the horse go backward?' என்று தான் கூறுவது வழக்கம். 'Rear' என்ற அழகிய சுருங்கிய சொல் கூறுவது வெகு அருமை. பையன் வெகு கெட்டிக்காரன்" என்று கூறினார்.

ஒரு நாள் என் தந்தை என்னைக் கூப்பிட்டு, "ராஜா (ராஜா என்பது சி. பி. யின் செல்லப்பெயர்) இப்பொழுதே

சேம்பர்ஸ் மிஸ்ஸல்லெனி (Chambers' Miscellany) என்ற பத்துப் புத்தகங்களை யும் படித்து, மனத்தைக் கவ ரும்படி ஆங்கிலம் பேசுகிருன். நீ இப்படிப் பயந்து பயந்து தயங்கித் தயங்கிப் பேசுகிருயே. நீயும் அந்தப் புத்தகங்களைப் படிக்க வேணும்" என்று கண் டித்துக் கூறினர். உடனே அந்தப் புத்தகங்களை எனக்கு வாங்கிக்கொடுத்தார். நானும் அவைகளைக் கருத்துடன் படித்தேன்.

சி. பி. ராமஸ்வாமி ஐயர் அவருடைய தகப்பனுருக்கு ஒரே குழந்தை. அவரைத் தவிர வேறே மகனே, மகளோ இல்லை. தம்முடைய ஒரே குழந்தையினிடத்தில் தந்தைக்கு அளவற்ற அன்பு. ஆனல் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் வெகு கண்டிப்பாக இருப்பார்.

ஒரு சமயம் சி. பி. குறிப் பிட்ட காலம் கடந்து, இரவு 8 மணிக்குப் பிறகு வீட்டுக்கு வந்தார். அதைக் கண்ட தந்தை கோபித்து, வீட்டுக்கு வெளியே இருக்க உத்தர விட்டுக் கதவைத் தாழிட்டு விட்டார். வெகு நேரம் சென்ற பிறகு, அவருடைய தாய், தந்தை அறியாதபடி, மகனை உள்ளே அழைத்து வந்து சாதம் போட்டாள்.

ஒரு சமயம் சி. பி. 'டென்னிஸ்' போட்டிப் பந்த யத்தில் கலந்துகொண் டிருந் தார். அதில் வெற்றி பெறுவ தற்காக ஆடிப் பழகுவது வழக் கம். ஒரு நாள் நடுப்பகலில் அவர் பிரசிடென்ஸி காலேஜில் 'டென்னிஸ்' ஆடிக்கொண்டி ருந்தார். அப்பொழுது அவர் தந்தை சிராத்தம் செய்து விட்டுக் கோர்ட்டுக்குக் கடற் கரை வழியாகப் போனர். அங்கே தம் மகன் மத்தி யான்ன வெயிலில் பந்தாடு வதைக் கண்டு சினந்து காலேஜ் தலைமை உபாத்தியா யருக்குத் தம் மகன் செயலைக் கண்டித்து, "நீங்கள் ஏன் கண்டிக்கக் கூடாது?" என்று எழுதினர். தலைமை உபாத்தி யாயர் ஜி. எச். ஸ்டுயர்ட் என்பவர். அவர் உடனே மாணவனைக் கூப்பிட்டு, "அப்பா போகும் வீதி அருகில் இனிமேல் பந்தாட வேண்டாம்" என்று வேடிக்கை யாகக் கூறிக் கண்டித்தார்.

சி. பி. ராமஸ்வாமி ஐயருக் குக் கால் பந்து விளையாட்டி லும் மிகவும் ஆசை. ஒரு சமயம் அவருடைய காலேஜ் மாணவர்களும், சில சிப்பாய்க் கழக அங்கத்தினர்களும் கால் பந்துப் போட்டி ஆட்டம் நடத்தினர்கள். அப்பொழுது பலமான தாக்குதலால் சி. பி. க்குப் பலத்த காயம் உண்டாயிற்று. அப்படியிருந் தும்கூட அதைப் பொருட் படுத்தாமல் மேலும் வெற்றி யுடன் ஆடினர்.

சி. பி. ராமஸ்வாமி ஐயர் செல்வச் சீமானுக இருந்துங் கூடத் தம்முடைய சைக்கிளைத் தாமே துடைத்து, எண் ணெய் விட்டுச் செம்மையாக வைத்துக்கொள்ளுவார். ஒரு சமயம் அப்படிச் செய்யும் போது, சைக்கிள் சங்கிலி விரலை அறுத்துவிட்டது. புண் ஆறின பிறகும் அந்த வேலையை அவரே செய்து வந்தார்.

சி. பி. க்குச் சிறு வயசிலி ருந்தே குதிரைச் சவாரி செய்வ தென்ருல் மிக விருப்பம். சரிகை வேலைப்பாட்டுடன் கூடிய 'வெல்வெட்' குல்லாய் அணிந்து, அரச குமாரனைப் போல், அவர் குதிரைச் சவாரி செய்வதைக் கண்டு நான் மகிழ்ந்ததுண்டு. அவருக்குப் படிப்பில் எவ்வளவு ஆர்வமோ, அப்படியே விளையாட்டுகளிலும் மிகுந்த ஆர்வமுண்டு. எல்லாருடனும் கலகலப்பாகப் பழகி, பலவித விளையாட்டுகளிலும் பங்கெடுத் துக் கொள்ளுவார்.

அவர் இளமைப் பருவத்தி லேயே வெகு அழகான, அருமையான ஆங்கிலக் கவி களை இயற்றினர். அவைகளில் சில 'இந்தியன் ரிவியூ' முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவந்தன. ஆனுல் எல்லாக் கவிகளையும் சேர்த்து வெளி யிடவில்லை. அப்படி வெளி யிட்டால் மிகவும் அழகாகவும் உபயோகமாகவும் இருக்கும்.

இளமைப் பருவத்திலேயே தம்முடன் படிக்கும் மாணவர் களுக்கும் பொது ஜனங்களுக் கும் உதவி செய்வதில் மிகுந்த விருப்பம் உள்ளவர் சி. பி. இப்பொழுது அவர் செய்து வரும் பொதுஜனத் தொண்டுக் கும் நன்கொடைகளுக்கும் மூலம் இளமையிலேயே நன்ருக விளங்கியது.

மிகச் சிறுவயசிலேயே ஒரு சமயம் அவருடன் நான் பேசிக் கொண்டிருந்த போது, "வேள்வி செய்து கடவுளை வணங்கி, தியானம் செய்து கடவுளைக் காண வேண்டும். அவர் அருளைப் பெற வேண்டும்" என்று கூறினர். அது இன்று என் நினைவுக்கு வருகிறது. "விளையும் பயிர் முளையிலே" என்ற பழமொழி உண்மையே. அவருக்கு இன்று ராமாயணம், கீதை, உபநிஷத்து முதலிய நூல்க ளில் உள்ள அறிவுக்குரிய முளை, அப்பொழுதே தென் பட்டது. அவர் எல்லாவற்றி லும் முன்னணியில் நின்ருர். அவர் காலேஜில் படிக்கும் போது, பல்கலைக் கழகப் பரீக்ஷையில், ஆங்கிலத்திலும் வடமொழியிலும் முதல் மாணவராகத் தேர்ந்து பல பரிசுகளைப் பெற்றிருக்கிருர். பிறகு வக்கீலாகவும், மந்திரி யாகவும், திவானுகவும், தேசத் தொண்டராகவும் ஆற்றிய பல பணிகளை உலகம் அறிந்திருக் கிறது.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(S)96. சுப்பிரமணியன், P. S., (ஊர் எழுதவில்லை). 97. சுவாமிநாதன், B., சீகாழி. 98. சங்கரநாராயணன், G., திருவனந்தபுரம். 99. சரோஜா, S., திருவனந்தபுரம். 100. சேஷசாயி, K. V., சேலம். 101. சுசீலா, V., சென்னை, 14. 102. சுனிதா, D. R., பாபநாசம். 103. சம்பத், R., திருச்சிராப்பள்ளி. 104. சங்கரப்பிள்ளை, க., சாவகச்சேரி. 105. சுகுணா, C., அக்பராபாத். 106. ஸ்வர்ணலதா, எஸ்.வி., பம்பாய், 19. 107. ஸரஸ்வதி, வி., மாலதி, வி. கோட்டயம். 108. ஸ்ரீதர் சத்தியமூர்த்தி, S., சுசீலா, K., சென்னை, 18. (T) 13. தங்கசாமி, இ., எட்டையபுரம். 14. திருஞானம், வே., நெடுக்குளம். 15. தங்கராஜ், K. P. M., டிக்கோயா. (U) 2. உடையப்பன், மு., தேவகோட்டை. 3. உமா, N., வசந்தா, N., சுசீலா, N., வேலூர். (V) 31. வைத்தியநாதன், K., குடியாத்தம். 32. விஜயாள், G., அமலநாதன், G., தாம்பரம். 33. வெங்கடாசலம், K. M., மார்த்தாண்டபுரம். 34. விசாலாக்ஷி, V., ஆண்டிப்பட்டி. 35. விசாலம், A. S., சங்கரன், A. S., கும்பகோணம். 36. வேலுசாமி, பி., இடைப்பாடி. 37. வேங்கடரமணி, R., மாயவரம். 38. வேங்கடசுப்பிரமணியன், K., பம்பாய். 39 விசுவநாதன், கோ., சீகாழி. 40. விசாலாக்ஷி, S., மணி, S. V., டில்லி. 41. விஜயகோபால், M. C., சுநு, M. C., புது டில்லி. 42. வேங்கடசுப்பிரமணியன், M., அடையாறு. 43. வேங்கடராமன், வீரராகவன், கிரிஜா, T. R., மயிலாப்பூர் (Y) 3. இளைஞர் முன்னேற்றச் சங்கம், தாராபுரம்.

(A) 43. ஆதிகேசவன், L. M., சென்னை, 17. 44. அப்துல், P. S, குன்னத்தூர். 45. அப்துல்லா, Md, M.A., பெரியமேடு. 46. அப்துல்காதர், S., கண்டி. 47. அப்துல்காதர், D., கண்டி. 48. அப்துல்காதர், M. R. S., கண்டி. 49. அப்துல்கரீம், S., ஆயப்பாடி. 50. அப்துல்காதர், P. A., கோயம்புத்தூர். 51. அப்துல் லதீப், A., கூனூர். 52. அப்துல் ஹாசன், ஜெ., ராமநாதபுரம். 53. அப்துல் வகாப், K., கோயம்புத்தூர். 54. அப்துல் ரசாக், M. குறிஞ்சிப்பாடி. 55. அப்துல் சத்தார், M., இளியனூர். 56. அப்துல் கலாம், M.S., சிலோன். 57. ஆப்ரஹாம், பத்மா எட்வர்டு,

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்)

ஆகஸ்ட் '50 கூபன் நெ.

வாகா. 58. ஆதிகேசவன், பார்த்த சாரதி, துரைசாமி, சரோஜினி தேவி, V. K., சிந்தாதிரிப்பேட்டை. 59. அகோர பாண்டியன், P, வத்தலக்குண்டு. 60. அகமத் மொஹதீன், M. P., ஏர்வாடி. 61. ஐயாசாமி, S., கிணத்துக்கடவு. 62. அக்பர், M.I., இலங்கை. 63. அலமேலு, S., பம்பாய் 19. 64. அளகப்பன், T. S., திருநெல்வேலி. 65. அளகப்பன், C.T., ராமசந்திரபுரம். 66. அமரசுந்தரி, P., பட்டுக்கோட்டை. 67. ஆனந்தன், குமார், சேலு, N. மயிலாப்பூர். 68. அண்ணாமலை, B., ராஜேசுவரன், திருவண்ணாமலை. 69. ஆறுமுகம், S., பெரம்பூர். 70. அன்பு, அய்யாவு, நாகர்கோயில். 71. ஆனந்தன், T., கிருஷ்ணன், ஷண்முகம், வசந்தன், ரமணி, வேலூர். 72. அருந்ததிபிள்ளை, கோட்டஹெளு. 73. அருணசலம், R. M., தநாசல், K. M., புதுவயல். 74. ஆத்மாராம், B., புனு, 1. 75. அருணசலம், வசந்தா, K. S., வேலூர். 76. அநசூயா, மயிலாப்பூர். 77. அண்ணாமலை, N., கோயம்புத்தூர். 78. ஆவுடையப்பன், கல்யாணி, S., குலசேகரப்பட்டணம். 79. அருளாம்பிகை, T. S., கண்ணுடையவள்ளல், T. S., பெங்களூர். 80. ஆறுமுகம், O.S., தண்டபாணி, M., கரூர். 81. ஆறுமுகம், K., வடுகச்சேரி. 82. அண்ணாமலைசாமி, R., அருணசலம், R., கருப்பையா, R., ராஜபாளையம். 83. அண்ணாமலை, N., வீரப்பாண்டி. 84. அருணசலம், K. R., கல்லல். 85. அருணசலம், M. N., புஷ்பா, M. N., ராகவன், L., மயிலாப்பூர். 86. ஆறுமுகம், S., கிழப்பாவூர். 87. அன்வர்பாக்ஷா, A., ஆதிச்சனூர். 88. அருணசலம், R. S., ராஜபாளையம். 89. அன்வர், S. M., கூத்தாநல்லூர். 90. அப்பாசாமி, M., சோழவந்தான். 91. அன்ஸாரி, சுல்தான், கண்டி. 92. அன்வருதீன், S. M., கூத்தாநல்லூர். 93. அர்த்தநாரிசாமி, K., திருச்செங்கோடு.

(B) 45. பேபி சரோஜா, எஸ்., லக்ஷ்மணன், எஸ்., நடராஜன், எஸ்., பலராமன், எஸ்., சென்னை, 21. 46. பாலாஜி, R., பிரியம்வதா, S., மயிலாப்பூர். 47. பாபு, G., ஸ்ரீரங்கம். 48. பாபு, கோயம்புத்தூர். 49. பாபு, V., சிந்தாதிரிப்பேட்டை. 50. பவானி, R., அலையாறு. 51. பாகீரதி, C., சென்னை, 2. 52. பாலசந்திரன், S., வில்லிவாக்கம். 53. பேபி E. எட்வின், போடிநாயக்கனூர். 54. பாக்கியரத்தினம், V., தூத்துக்குடி. 55. பானுமதிபாய், S., கும்பகோணம். 56. பக்தவத்சலம், L., சத்தியநாராயணன்,

★★★★★★★★★★ ★★★★★

கண்ணன்

மாதந்தோறும்

இங்கிலீஷ் 1-ஆம் தேதி

வெளிவரும்

★★★★★★★★★★ ★★★★★

ஆலங்காயம். 57. பாலகோபாலன், C. V., கோயம்புத்தூர். 58. பாஷ்யம், G. V., சந்திரா, T. S., மல்லேசுவரம். 59. புவனேசுவரன், R. G., வேலூர். 60. பாலகிருஷ்ணன், V., உடையார்கோயில். 61. பாலகிருஷ்ணன், K., கள்ளக்குறிச்சி. 62. பாலகிருஷ்ணன், N., சங்கரன், N., கோபால், K., மாம்பலம். 63. பாலகிருஷ்ணன், N., மீனாக்ஷி, N., கூனூர். 64. பாலகிருஷ்ணன், E., கொழும்பு. 65. பாலகிருஷ்ணன், G., மயிலாப்பூர். 66. பாலசுப்பிரமணியன், C., உடுமலைப்பேட்டை. 67. பாலசுப்பிரணியன், A., ஈரோடு. 68. பாலசுப்பிரமணியன், M. J., பெரம்பூர். 69. பாலசுப்பிரமணியன், R., கோபிசெட்டிபாளையம். 70. பாலசுப்பிரமணியன், G. K., சென்னை, 1. 71. பாலசுப்பிரமணியன், R., நடராஜன், R., திருப்பத்தூர். 72. பாலசுப்பிரமணியன், G., புதுச்சேரி. 73. பாலசுப்பிரமணியன். பேபி, கந்தசாமி, P., வடசேரி, 74. பாலசுப்பிரமணியன், S., திருவண்ணாமலை. 75. பாலசுப்பிரமணியம், R., ரகுபதி, R., கரூர். 76. பாலசுப்பிரமணியன், V., மதுரை. 77. பாலசுப்பிரமணியன், V., மன்னார்குடி. 78. பாலசுப்பிரமணியன், T. S., மதுரை. 79. பாலசுப்பிரமணியன், T. S., நங்கவள்ளி. 80. பாலசுப்பிரமணியன், K., திருவல்லிக்கேணி. 81. பாரதன், K. G., ராகவன், திருபுவனம். 82. பாஸ்கரன், A., தூத்துக்குடி. 83. பாஸ்கரன், P. S., கோயம்புத்தூர். 84. பாஸ்கர் டேவிட், P., உரிகம். 85. பரதராஜன், K., விசுவேச்சுவரன், சொர்ணய்யா, மயிலாப்பூர். 86. பாரத், A., பெங்களூர், 4. 87. பர்கேசுவரன், M., திருவண்ணாமலை. 88. பிர்மன், R., உலக்கல். 89. பிக்ஷேசுவரன், K. R., வில்லிவாக்கம். 90. பூபால்ராஜ், J. M., அன்னவாசல், தஞ்சாவூர். 91. பாலசுப்பிரமணியன், M., சீகாழி. 92. பாலசுப்பிரமணியன், M., வத்தலக்குண்டு. 93. பாலசுப்பிரமணியன், R., மீனாக்ஷி, R., கமலா, R., ராதாலக்ஷ்மி, R., பெரியகுளம். 94. பஜ்லுல்லா, A., கண்ணமங்கலம்.

(C) 22. சந்திரன், S. R., சாந்தா, S., மதுரம், S., சென்னை - 1. 23. சிதம்பரம், S., சேஷாத்திரி, R., கோயம்புத்தூர். 24. கிறிஸ்டிட்டி, P., மண்டபம் காம்ப். 25. சின்னப்பன் K. S., பழனிசாமி, K. S., சென்னிமலை. 26. கிளெமண்ட் ஜயகுமார், T., புகலூர். 27. செல்லமுத்து, S., வைரச்செட்டிப்பாளையம். 28. சந்திரசேகரன், N., தா. கல்லுப்பட்டி. 29 சந்திரமௌலி, R. M., கமலம், R. M., சோலைச்சி, R. M., விசாலாட்சி, R. M., சென்னை, 17. 30. சந்திரா, D., நாமக்கல். 31. சித்ரா, P., ஆலப்புழை. 32. சந்திராபாய், A. D., கோயம்புத்தூர். 33. சிற்றம்பலம், M. M., கார்த்திகேயன், மருதானை, கொழும்பு. 24. சின்னதுரை, M., கோரமண்டல். 35. சந்திரசேகரன், K., மயிலாப்பூர். 36. சந்திரசேகரன் K., திருக்கழுக்குன்றம், 37. செல்லம், M. மணி, M., இளங்கோ, M., ஈரோடு. 38. சந்திரமோகன், M., சிவகாசி. 39. சந்திரசேகரன், N., மயிலாப்பூர். 40. சந்திரமௌலி V., தியாகராயநகர், சென்னை, 17. 41. சந்திரசேகரன், V., சென்னை, 23. 42. சந்திரசேகரன், N., சிவகாசி. 43. சந்திரசேகர், V., கங்காரெட்டி, V. வந்தவாசி. 44. சந்திரசேகரன், B., தெப்பக்குளம், திருச்சி. 45. சந்திரா, G., இந்திரா, G. அடையாறு.

(மீதி அடுத்த இதழில் வரும்.)

குயில் ★ ★ ★ எழுதியவர்: தி. ஜ. ர.

வசந்த காலம். தாமரைக் குளமெல்லாம் மலர் நிறைந்து அழகாயிருந்தது. செடிகளெல்லாம் பூத்துக் குலுங்கின. மாம்பூவின் வாசனை கம்மென்று வீசியது.

'கூஉஉஉயில் —கூஉஉஉயில்!' என்று ஒரு குரல் வந்தது. மிக இனிமையான குரல். அது ஒரு பெண் குயிலின் பாட்டுக் குரல்.

'கூஉஉயில்—கூஉஉயில்!'

மறுபடியும் பாடியது அந்தக் குயில்.

குயிலின் குரலும் மயிலின் அழகுந்தான் பிரசித்தமாச்சே. பெண் குயில் பாடியதோ இல்லையோ, ஏழெட்டு ஆண் குயில்கள் ஓடி வந்தன.

பெண் குயில் ஒரு மரத்தின் மேல் ஒய்யாரமாய் உட்கார்ந்திருந்தது. இந்த ஆண் குயில்களெல்லாம் அதன் கிட்ட வந்து உட்கார்ந்தன. இவைகளையெல்லாம் பெண் குயில் பார்த்தது. ஒரே ஓர் ஆண் குயிலை மட்டும் அருகே அழைத்தது. மற்ற ஆண் குயில்களையெல்லாம் லட்சியம் செய்யவில்லை. அவைகள் ஏமாந்து பறந்து போய்விட்டன.

மிஞ்சிய ஆண் குயிலும் பெண் குயிலும் சிநேகமாயின. இரண்டும் சந்தோஷமாய் ஆடிப் பாடித் திரிந்தன.

'கூஉஉயில்— கூ உ உ யி ல்' என்று பெண் குயில் உல்லாசமாய்ப் பாடும்.

'ஹோவீஹோ-ஹோவீ ஹோ' என்று ஆண் குயில் பதில் பாட்டுப் பாடும்.

இரண்டுமாக மாமரத்துக்குப் போகும். மாம்பூவின் மதுரமான தேனைக் குடிக்கும். ஆலமரத்துக்குப் போகும். ஆலம் பழங்களைத் தின்னும். பூவரசு முதலிய மரங்களுக்குப் போகும். அவைகளைப் பயங்கரமாய்ச் சூழ்ந்திருக்கும் கம்பளிப் பூச்சிகளைக் கொத்திக் கொத்தித் தின்னும்.

இப்படியே சில நாள் அந்த இரண்டும் மிகவும் சந்தோஷமாய் இருந்தன.

ஒரு நாள் ஒரு மரத்தில் இரண்டு குயில்களும் உட்கார்ந்திருந்தன.

பெண் குயில் "குக்கூஉயில்-" என்று பேசத் தொடங்கியது. "நான் கருத் தரித்திருக்கிறேன். முட்டையிட வேண்டும். நமக்கோ ஒரு கூண்டும் கிடையாது. நாம் கட்டுவதேயில்லை. கள்ளிக் குருவியின் கூண்டு ஒன்றைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்" என்றது.

ஆண் குயில், "ஹோ—வீ ஹோ—" என்று பதில் சொல்ல ஆரம்பித்தது. "கள்ளிக் குருவியின் கூண்டுதானா வேண்டும்? வேறு கூண்டு பயன்படாதா? உன் முட்டையை எந்தப் பட்சியின் முட்டை மாதிரியும் மாற்ற உனக்குத் தெரியாதா?" என்று கேட்டது.

"தெரியாது; தெரியாது. சில மனிதர் இப்படி நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது தவறு. காக்கைக் கூண்டில் பிறந்து வளர்ந்த பெண் குயில்கள் பல உண்டு. அவை காக்கைக் கூண்டிலேயே முட்டை இடும். சின்னப் பருந்துக் கூண்டில் கூடச் சில பெண் குயில்கள் வளர்ந்ததுண்டு. அவை பருந்துக் கூண்டிலேயே முட்டை இடும். நான் கள்ளிக் குருவியின்

கூண்டில் வளர்ந்த குயில். அதன் கூண்டிலேயே முட்டையிடுவேன். அதன் முட்டைபோலவே என் முட்டை இருக்கும்'' என்றது பெண் குயில்.

''அப்படியா? சரி. கள்ளிக் குருவியின் கூண்டு ஒன்றைக் கண்டுபிடிக்கிறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டது ஆண் குயில்.

அப்படியே ஒரு கூண்டை அது கண்டுபிடித்துவிட்டது.

திருகு கள்ளிப் புதர் ஒன்றில் அந்தக் கூண்டு தொங்கியது. அதில் ஆணும் பெண்ணுமாக இரண்டு கள்ளிக் குருவிகள் வசித்தன. பெண் கள்ளிக் குருவி நாலு முட்டைகள் இட்டிருந்தது. அந்த முட்டைகளை அது அடை காத்துக்கொண் டிருந்தது. ஆண் கள்ளிக் குருவியும் கூடவே இருந்தது.

அந்தக் கள்ளிக் குருவிகள் கூண்டிலேயே இருக்கும்போது பெண் குயில் அங்கே போய் எப்படி முட்டையிட முடியும்? கள்ளிக் குருவிகளை ஏமாற்றி வெளியே இழுக்க வேண்டும். அப்போதுதான் பெண் குயில் அங்கே போய் முட்டை இட முடியும்.

ஆண் குயில் மெல்ல அந்தக் கூண்டின் கிட்டப் போயிற்று. குறும்புத்தனமெல்லாம் செய்தது.

குயிலைக் கண்டாலே மற்றப் பட்சிகளுக்கெல்லாம் கோபம். எல்லாம் ஒன்று சேர்ந்து கொள்ளும். பாய்ந்து பாய்ந்து குயிலை விரட்டும். தங்களுக்குக் கேடு செய்யவே குயில் வருகிறது என்று பட்சிகளுக்குப் பயம்.

அதனுலேயே அவைகள் இப்படிக் குயிலை விரட்டுகின்றன.

இந்த ஆண் குயிலோ குறும்புத்தனம் வேறு செய்யத் தொடங்கிவிட்டது. கள்ளிக் குருவிகள் இரண்டுக்கும் ஒரே ஆத்திரம். 'கிசு பிசு-கிசு பிசு' என்று கள்ளிக் குருவிகள் என்னவோ உளறின. கள்ளிக் குருவிகளுக்கே உளறத்தான் தெரியும். அழகாய்க் கூவத் தெரியாது.

ஆண் குயிலை இரண்டு குருவிகளும் விரட்டத் தொடங்கின.

ஆண் குயில் பறந்தோடியது. நொண்டிபோல் பாசாங்கு செய்தது. தரையில் இறங்கி விந்தி விந்தி நடந்தது.

ஆண் குயிலை இரண்டு குருவிகளும் கொஞ்ச தூரம் விரட்டிவிட்டுத் திரும்பின.

ஆண் குயில் மறுபடியும் ஓடி வந்து பாய்ச்சல் காட்டியது; விஷமம் செய்தது. குருவிகள் முன்னைவிட அதிக ஆத்திரம் கொண்டன; வெகு தூரம் வரைக்கும் குயிலை விரட்டிக்கொண்டு சென்றன. இப்படியே இரண்டு குருவிகளையும் ஆண் குயில் ஏமாற்றி ரொம்ப தூரம் இழுத்துச் சென்றுவிட்டது.

இப்போது கூண்டிலே முட்டைகள் மட்டும் இருந்தன. காவல் எதுவும் இல்லை. இந்தச் சமயம் பார்த்துப் பெண் குயில் வந்தது. கள்ளிக் குருவியின் முட்டை ஒன்றை அலகால் கொத்தி எடுத்தது. கீழே எறிந்தது. தான் அதற்குப் பதிலாக ஒரு முட்டை இட்டது. பிறகு ஜம் என்று பறந்து போய் விட்டது.

கொஞ்சநேரம் கழித்துக் குருவிகள் திரும்பி வந்தன. பெண் குருவி முன்போலவே முட்டைகளை அடைகாத்தது. தன் முட்டைகளை மட்டும் அல்ல; குயிலின் முட்டையையும் அடைகாத்தது.

சில நாளில் முட்டைகள் வெடித்தன; குஞ்சுகள் வெளி வந்தன. மூன்று கள்ளிக் குருவிக் குஞ்சுகள்; ஒரு குயில் குஞ்சு.

குயில் குஞ்சு வெளிவந்தவுடனேயே, 'பசி - பசி - பசி' என்று வாயைப் பிளந்தது.

கள்ளிக் குருவிகள் எங்கேயோ போய்ப் பூச்சி புழுக்களையும் தானியங்களையும் கொத்திவரும். குருவிக் குஞ்சுகளை முந்திக்

கொண்டு குயில் குஞ்சு வந்து வாயைப் பிளக்கும். குருவிகளும் பதற்றப்படாமல் குயில் குஞ்சுக்கு ஊட்டும். இப்படியே திரும்பத் திரும்பக் குயில் குஞ்சே எல்லா உணவையும் பறித்துக் கொள்ளும். மற்றக் குஞ்சுகள் பட்டினியாக இருக்கின்றனவே என்று பெரிய குருவிகள் பரிதாபமுற்றன. அடுத்த தடவை உணவை மற்றக் குஞ்சுகளிடம் நீட்டின. அவையும் ஆவலோடு வாயைப் பிளந்துகொண்டு வந்தன.

"இந்தாருங்கள். அப்பால் போங்கள்" என்று அவைகளை ஒருபுறம் தள்ளியது குயில் குஞ்சு. அந்த உணவையும் அதுவே பிடுங்கிவிழுங்கிவிட்டது.

இதோடு நிற்கவில்லை குயில் குஞ்சு. இரண்டொரு நாளிலேயே அது பெரிசாக வளர்ந்து விட்டது. மற்றக் குஞ்சுகளோ அப்படி வளரவில்லை; சிறிசாகவே இருந்தன. கூண்டில் பெரும்பகுதியையும் குயில் குஞ்சு தானே ஆக்கிரமித்துக் கொண்டது. மற்றக் குஞ்சுகளை இடித்து நெருக்கி ஒரு மூலைக்குத் தள்ளிவிட்டது. பெரிய குருவிகளுக்குக்கூட இடமில்லை என்று தகராறு செய்ய ஆரம்பித்தது. "எனக்கே இங்கே இடம் போதவில்லை. நீங்கள் வேறு உள்ளே நுழையவாவது! நுழையாதீர்கள்" என்று அவைகளை வெளியிலேயே நிறுத்தி விட்டது.

இரண்டு மூன்று நாள் கழித்து, இரண்டு பெரிய குருவிகளும் எங்கேயோ இரை தேடப் போயிருந்தன. அப்போது மற்ற மூன்று குஞ்சுகளையும் குயில் குஞ்சு வெளியே நெட்டித் தள்ளி விட்டது. அவையோ சின்னக் குஞ்சுகள். அதோடு பட்டினியும் சேர்ந்துகொண்டது. அவை கீழே விழுந்து சோர்ந்து செத்துக்கொண்டிருந்தன.

பெரிய குருவிகள் இரண்டும் திரும்பிவந்தன. தங்கள் சொந்தக் குஞ்சுகள் தரையில் புரண்டு சாவதைக் கண்டன. பரிதாபம் உற்றன. இருந்தாலும் அவைகளைக் கூண்டுக்குத் தூக்கிவரவில்லை. பொல்லாத குயில் குஞ்சைக் கைவிடவில்லை. அதற்கு ஆகாரம் கொடுத்து வளர்த்துக் கொண்டே வந்தன.

வரவரக் குஞ்சு மிகப் பெரிதாக வளர்ந்தது. சுலபமாய்

அதற்கு உணவு ஊட்டிவிடக் கூடக் குருவிகளால் முடியவில்லை. குயில் குஞ்சின் தோள்மீது ஏறி உட்கார்ந்துகொண்டு அதற்கு ஊட்டிவிட்டன.

குயில் குஞ்சுக்கு எப்போது பார்த்தாலும் பசிதான்; அபாரப் பசி. சிறிதுகூட ஓயாமல் இரண்டு குருவிகளும் குயில் குஞ்சுக்கு இரை கொடுத்துக் கொண்டே வந்தன. சலிக்காமல் சளைக்காமல் அப்படிக் கொடுத்து வந்தன.

தாய்க் குயிலோ முட்டை இட்டதோடு சரி. அப்புறம் இந்தக் குஞ்சு வெளி வந்ததா என்று கூடப் பார்க்கவில்லை. மனிதர்களிலே சில தாய்மாருக்குக் குழந்தை பிறந்ததும் செவிலித் தாய் அமர்த்தி விடுகிறார்களே; அந்தமாதிரிதான் குயிலும் செய்தது. அதுபாட்டுக்கு எங்கேயோ ஓடிப் போயிற்று. சிநேகம் கொண்ட ஆண் குயிலைக்கூட லட்சியம் செய்யவில்லை. தன்னந் தனியே அந்தப் பெண் குயில் ஓடிவிட்டது.

இங்கே கூண்டில் இருந்த குயில் குஞ்சுக்கு, தன் தாயைத் தெரியவே தெரியாது. இந்தக் கள்ளிக் குருவியே தன் பெற்றோர் என்று நினைத்துக்கொண்டிருந்தது.

இப்போது குயில் குஞ்சு மிக நன்றாய் வளர்ந்துவிட்டது. அந்தக் கூண்டிலே அதற்கு இருப்புக் கொள்ளவில்லை. என்னவோ ஏக்கத்தோடு அது தவித்துக் கொண்டிருந்தது.

கள்ளிக் குருவிகள் வழக்கப்படி இரைதேடப் போயிருந்தன.

இந்த வேளையில் ஆகாயத்திலிருந்து ஓர் இனிய கீதம் கேட்டது.

'கூஉஉஉயில்—கூஉஉஉயில்—கூஉஉஉயில்!'

கூண்டிலிருந்த குயில் குஞ்சுக்கு இதைக் கேட்டதும் உள்ளம் பரபரத்தது. தன்னையறியாத ஓர் ஆனந்தம் உண்டாயிற்று. இறக்கையை அடித்துக் கொண்டது. தான் யார் என்று அதற்குத் தெரிந்துவிட்டது.

"நான் கள்ளிக் குருவிக் குஞ்சல்ல; அல்ல. குயில் குஞ்சு; நான் குயில் குஞ்சு; இன்னிசை பொழியும் குயில் குஞ்சு" என்று சொல்லிக்கொண்டது,

"கூஉஉஉயில் — குக் கூஉஉஉயில்" என்று வானமெல்லாம் இன்பம் பொங்கப் பாடிக் கொண்டே அந்தக் குயில் குஞ்சு பறந்தோடிவிட்டது.

இந்த இதழுடன் 'ஜக்கு' முடிவடைகிறது. அடுத்த கண்ணனில், **'ஜக்கு - துப்பறிகிறான்'** என்ற புதிய தொடர் ஆரம்பமாகிறது. விறு விறுப்பும் பிரமிப்பும் ஊட்டுகிற இந்தத் தொடர் ஜக்குவைவிட அபாரமாய் இருக்கும்.

---

10 பூக்கள் இருக்கின்றன. அவற்றை வரிசைக்கு நாலு விதம் 5 வரிசையில் வைக்கவேண்டும். முடியுமா பாருங்கள்.

செ. வெ. நாராயணமூர்த்தி (வயது 13), சேலம்.

(விடை வேறு பக்கத்தில் இருக்கிறது.)

* * *

ஒரு பொம்மை வியாபாரி நவராத்திரி விற்பனைக்குப் பொம்மைகள் வாங்க ரூ. 10,000 எடுத்துக்கொண்டு போனார். 10,000 பொம்மை வாங்கவேண்டும் என்பது அவர் ஆசை. யானைப் பொம்மையின் விலை ரூ. 50; குதிரையின் விலை ரூ. 40; பூனை விலை அரை ரூபாய். பத்தாயிரம் ரூபாய்க்குப் பத்தாயிரம் பொம்மைகள் வாங்கியும் விட்டார். அப்படியானால் அவர் ஒவ்வொன்றிலும் எத்தனை வாங்கியிருப்பார்? (இதற்கு 5 விடைகள் வருகின்றன. உங்களால் அத்தனையும் கண்டுபிடிக்க முடியாவிட்டால் விடைக்கு வேறு பக்கத்தைப் பாருங்கள்.)

R. சேஷாத்திரி, எழும்பூர்.

* * *

கண்ணன் ஆசிரியருக்கு என் மனமார்ந்த வந்தனங்கள். ஒரு பாட்டு எழுதியிருக்கிறேன். இதைப் பிரசுரித்தால் பிரசுரியுங்கள்; இல்லையேல் வேண்டாம். பிரசுரிப்பதாய் இருந்தால் எழுத்துப் பிழை (பிழை) இருந்தால் தயவு செய்து திருத்திக்கொள்ளுங்கள்.

பாட்டு

ஒன்றே ஒன்றம்மா என்னம்மா
பாரத தேசம் ஒன்றம்மா
இரண்டே இரண்டம்மா என்னம்மா
சந்திர சூரியர் இரண்டம்மா
மூன்றே மூன்றம்மா என்னம்மா
மும்மூர்த்திக்குத் தலை மூன்றம்மா
நான்கே நான்கம்மா என்னம்மா
கிழக்கு மேற்கு தெற்கு வடக்கெனும் திசைகள் நான்கம்மா
ஐந்தே ஐந்தம்மா என்னம்மா
பஞ்ச பாண்டவர் ஐந்தம்மா
ஆறே ஆறம்மா என்னம்மா

ஆறுமுகக் கடவுள் முடி ஆறம்மா
ஏழே ஏழம்மா என்னம்மா
வாரத்தில் நாட்கள் ஏழம்மா
எட்டே எட்டம்மா என்னம்மா
திக்குகள் மொத்தம் எட்டம்மா
ஒன்பதே ஒன்பதம்மா என்னம்மா
நவக்கிரகங்கள் ஒன்பதம்மா
பத்தே பத்தம்மா என்னம்மா
ராவணனுக்குத் தலை பத்தம்மா.
(குற்றம் இருந்தால் மன்னிக்கவும்)

N. சரஸ்வதி, பீளமேடு. (S. 112)

* * *

காமிராசப் பரிசுக் கதை

முருகன் தபால்க்காரன். அவன்க் கெட்டவன். ஒரு நாள் ஒருவருக்கு மணியார்டர் வந்தது. உடனே அதை(த்) தானே எடுத்து(க்)கொண்டான். உடனே கள்ள(க்) கையெழுத்து(ப்) போட்டு, தானே எடுத்துக்கொண்டான். உடனே ஒருவர் பார்த்துவிட்டார். உடனே தபால(ா)பீஸில் சொல்லி முருகனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு (க்) கூட்டிக்கொண்டு போனார். உடனே 2-வருஷம் கடுங்காவலில் சிறைவாசம் கிடைத்தது. அது முதல் முருகன் நல்லவனாக இருந்தான்.

(பரிசுப் போட்டிக்கு வந்த சின்னஞ்சிறு கதை.) K. லக்ஷ்மி (K 62)

பெரிய எழுத்துக்களை விலக்கி, ( ) இதற்குள் இருக்கும் எழுத்துக்களைச் சேர்த்துப் படிக்கவேண்டும்.—ஆ - ர்)

* * *

மர்ம எழுத்து



இது என்ன எழுத்து என்று தெரிகிறதா? இதை உங்களால் நிச்சயம் கண்டுபிடிக்க முடியாது. கடிதங்களை இப்படியே எழுதினால் அதை வேறு ஒரு பக்கத்தில் உள்ள 'கீ' யை வைத்துக்கொண்டுதான் கண்டுபிடிக்க முடியும். அதை வைத்துக்கொண்டு நீங்களே எழுதலாம். எங்கே, முயன்று பாருங்கள்.

A. 9. கண்ணன் கழகம்.

* * *

வேடிக்கைப் பேச்சு

இரண்டு வழிப்போக்கர்கள் ஒரு காட்டுப் பாதையில் போய்க்கொண்டிருந்தார்கள். ஒருவன் மற்றவனிடம் பின்வருமாறு கூறி

னுன்: "ஐமுகப் புலி நாமாகாணியில் பாய்ந்து எம்மாகாணி வரையிலும் நோகுதே."

அதற்கு மற்றவன் பதில் சொன்னுன்: "பத்துத் தேரோட்டியவன் மூத்த மகன் மித்துருவுக்குச் சத்துருவின் மனைவி காலை ஒடித்து, மீதியில் காலைத் தேய்த்துவிட்டுப் போ."

ஏதாவது புரிகிறதா உங்களுக்கு?

ஐமுகப் புலி என்ருல் நெருஞ்சி முள். நா மாகாணி கால். எண் மாகாணி அரை. (இடுப்பு என்றும் இதற்கு அர்த்தம்.) அதாவது நெருஞ்சிமுள் காலில் பாய்ந்து இடுப்பு வரையிலும் நோகுதே என்றுதான் அவன் சொன்னுன். அதற்கு மற்றவன் சொன்னது: பத்துத் தேரோட்டியவன் தசரதன். அவன் மூத்த மகன் ராமன். அவன் மித்துரு சுக்கிரீவன். அவன் சத்துரு வாலி. வாலியின் மனைவி தாரை. அதில் (ா) வாங்கிவிட்டால் தரை. தரையில் காலைத் தேய்த்துவிட்டுப் போ என்பதே மற்றவன் சொன்ன பதில்.

டி. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீவைகுண்டம்.

* * *

சென்ற இதழில் கடலூர்த் தம்பி K. மணலிங்கம் தங்க பாட்ஜ் கேட்டதில் தவறு ஒன்றும் இல்லையே. தன்னிடமே தங்க ஒரு பாட்ஜ் கேட்டான். அவன் பெரியவன் ஆகி, சங்கத்தை விட்டு வெளி வந்தபிறகும் தன்னிடமே தங்கி இருப்பதற்காகக் கேட்டிருக்கிருன். அதில் தவறு என்ன? பாட்ஜைத் திருப்பித் தர வேண்டாம் என நினைக்கிறேன். அப்படித்தானே?

வி. சாந்தா, விழுப்புரம்.

(தங்கமான பேச்சு! பாட்ஜைத் திருப்பித்தர வேண்டாம் என்று நினைக்கிருயே, அது தங்கமான எண்ணம். தங்கம்போல அதை நீங்களே வைத்துக்கொள்ளலாம்.—ஆ - ர்.)

* * * *

விடை

பத்தாயிரம் ரூபாய்க்குப் பத்தாயிரம் பொம்மைகள்.

1. யானை = 11 × 50 = 550
குதிரை = 469 × 10 = 4690
பூனை = 9520 × ½ = 4760
10000 10000

2. யானை = 30 × 50 = 1500
குதிரை = 370 × 10 = 3700
பூனை = 9600 × ½ = 4800
10000 10000

3. யானை = 49 × 50 = 2450
குதிரை = 271 × 10 = 2710
பூனை = 9680 × ½ = 4840
10000 10000

4. யானை = 87 × 50 = 4350
குதிரை = 73 × 10 = 730
பூனை = 9840 × ½ = 4920
10000 10000

5. யானை = 68 × 50 = 3400
குதிரை = 172 × 10 = 1720
பூனை = 9760 × ½ = 4880

$$\begin{array}{rr} \hline 10000 & 10000 \\ \hline \end{array}$$

விடை



10 பூக்களை 5 வரிசையில் இப்படித்தான் வைக்கவேண்டும்,

* * *

மர்ம எழுத்தின் 'கீ'



EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.

உங்களுக்காகவே ஒரு புத்தகம்!

ராஜாவும் குருவியும்

கதைகளில் இந்தக் காலத்துக் கதை வேண்டும், அந்தக் காலத்துக் கதை வேண்டாம் என்று யாரும் சொல்லமாட்டார்கள்! எந்தக் காலத்துக் கதையாக இருந்தாலும் அது நன்றாக இருக்கவேண்டும். அந்தக் காலத்தில் மட்டும் பிராணிகளும் பட்சிகளும் பேசிக் கொண்டா இருந்தன? யுத்தியைப் புகுத்தி அறிவைப் பெருக்க அதெல்லாம் ஒரு வழி.

அதே முறையில் குழந்தைகளுக்கு என்று தயாரானது இந்த அருமையான புத்தகம்.

மணி மணியான ஏழு கதைகள் இதில் இருக்கின்றன. பெரிய எழுத்தில் வர்ணப் படங்களுடன் 'ஜம்'மென்று இருக்கிறது புத்தகம். பழைய நரியையும் பழைய நாயையும் பழைய குருவியையும் பல உருவங்களில் படித்த குழந்தைகளுக்கு அந்தப் பிராணிகள் இங்கே வேறுமாதிரியில் நடப்பதைக் காண வேடிக்கையாக இருக்கும்; புதுமையாகவும் இருக்கும். சுவாரஸ்யத்துக்குக் கேட்பானேன்?

அந்தக் காலத்துச் 'சோமசன்மா'வின் பஞ்ச தந்திரக் கதைகளை ராஜகுமாரர்கள் படித்தார்கள். இந்தக் காலத்துச் 'சோமசன்மா'வின் கதைகளை நாமும் படிக்கத்தான் வேண்டும்; ரஸிக்கவும் வேண்டும். கை நிறைந்த பரிசு!

விலை 8 அணா

நீங்கள் கண்ணன் கழக அங்கத்தினர்களா?

அப்படியானல் உங்களுக்குக் கட்டாயம் கமிஷன் உண்டு.

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

Reg. No. M. 5542.



‘வியூ மாஸ்டர்’ பரிசு

இந்தத் தடவை பரிசைத் தட்டிக் கொண்டு போவது வெகு சுலபம். அதனால் எல்லாருமே இந்தப் போட்டியில் கலந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன். கதையை நானே கொஞ்சம் கொடுத்திருக் கிறேன். அதை வைத்துக்கொண்டு அழகான கதையாக எழுதவேண்டும். சிறந்த கதைக்கு ‘வியூ மாஸ்டர்’ கிடைக்கும் என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே

இதுதான் கதை:

பிரபல ஜவுளி வியாபாரி முருகேச முதலியார் கடையில் கமலாவின் அம்மா துணிகளை எடுத்து வைத்துவிட்டு வந்தாள். எதிர் வீடுதான் முருகேச முதலியார் வீடு. அவர் பையன் கிட்டுவைக் கூப்பிட்டு, “கமலாவின் கையில் பணம் கொடுத்திருக் கிறேன். இரண்டு பேருமாகப் போய், துணிகளை வாங்கிக் கொண்டு வாருங்கள்” என்றாள்.

கடையில் குமாஸ்தா ரங்கசாமி மட்டும் உட்கார்ந்திருந்தார் வேறு பையன்கள் இல்லை. கிட்டுவும் கமலாவும் நுழைந் சமயத்தில் கிருதா மீசை குப்புசாமியும் உள்ளே நுழைந்தான் ஆளைப் பார்த்தாலே முரடன் என்று சொல்லிவிடலாம். அவனை கிட்டு ரெயில்வே ஸ்டேஷனில் ஒரு தடவை பார்த்திருக்கிறா

கமலா ஐம்பது ரூபாயைக் கொடுத்து, துணிகளைப் றுக்கொண்டாள். ரங்கசாமி அந்த நோட்டுக்களை வாங்கி மே யின்மீது வைத்தார். கடைப் பையன் உள்ளே நுழைந்து வருவதைக் கண்டு அவர் திரும்பினார். அடுத்த கணம் மேன லிருந்த நோட்டுக்களைக் காணவில்லை.

முருகேச முதலியார் வருகிற சமயம். அவர் மிகவும் நல் வர்தான். ஆனால் மகா முன்கோபக்காரர். ரங்கசாமி தி திருவென்று விழித்துக்கொண் டிருந்தார்.

மேலே கதையை ஜோடித்து எழுதுங்கள்.

நிபந்தனைகள்:

1. நீங்களாகவே எழுதிய சொந்தக் கதையாக இருக்கவேண்
2. கண்ணனில் 4 - முதல் 6 - பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
3. எழுதுகிறவர் கண்ணன் கழக அங்கத்தினராக வேண்டும்.
4. 7-முதல் 15-வயதுக்குள் இருக்கவேண்டும்.
5. பெற்றோர்களோ வாத்தியாரோ எழுதுகிறவர் வய அத்தாட்சி கொடுக்கவேண்டும்.
6. ஒரே பக்கத்தில் தெளிவாக மையால் எழுதவேண்டும்.
7. கதை கிடைக்கவேண்டிய கடைசித் தேதி 31-8-'50.